Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 15 சோபகிருது வருடம், ஆனி மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை
(12.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 23, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## உயர்தரப் பரீட்சை

### நவ.27 இல் ஆரம்பம்

2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். அன்றைய தினம் ஆரம்பமாகும் உயர்தரப் பரீட்சை டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி நிறைவடையும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## தேவையுடையோருக்கு உடனடி நிவாரணம்

### ஜனாதிபதி ரணில் பணிப்பு

நா. தினுஷா

விசேட தேவையுடையவர்கள், சிறுநீரக நோயாளர்கள், புதிதாக நிவாரணத்தை எதிர்பார்த்திருப்பவர்களுக்கு சமூக வலுவூட்டல் அமைச்சினூடாக உடனடியாக கொடுப்பனவுகளை வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

02 பக்கம்

# நீதித்துறை ஸ்தம்பிதம்!

## சரத் வீரசேகரவின் கருத்துக்கு எதிராக வடக்கு கிழக்கில் கவனயீர்ப்புப் போராட்டம்

பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி தமிழ் நீதிபதிகளுக்கு எதிராக ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர சபையில் வெளியிட்ட கருத்தை கண்டித்து வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சட்டத்தரணிகள் நேற்று (11) பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டிருந்தனர். இதன் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் நீதித்துறை முற்றாக ஸ்தம்பிதமடைந்தது.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் தமிழ் பௌத்த வழிபாட்டு எச்சங்கள் மீது சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ள சிங்கள பௌத்த கட்டுமானங்களைப் பார்வையிட முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜா கடந்த 04 ஆம் திகதி சென்றிருந்தார்.

அப்போது தனது குழுவினருடன் அங்கு வருகைதந்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கருத்துக் கூற முற்பட்டபோது அதற்கு மறுப்புத் தெரிவித்த நீதிபதி அவரை அங்கிருந்து வெளியேற்றினார். இதனால் ஆத்திரமடைந்த வீரசேகர, தமிழ் நீதிபதிகளை அச்சுறுத்தும்... 02 பக்கம்






## கைவிடப்பட்டது போராட்டம்



கே. சுபானி

அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் சங்கத்தினால் இன்றைய தினம் முன்னெடுக்கப்படவிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்படுவதாக சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் நேற்று (11) அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் முன்னணி வைத்தியசாலை என்ற ரீதியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன.

02 பக்கம்



## ரூ.55 இலட்சம் ஹஜ் நிதியை

### மூவருக்கு வழங்க அறிவுறுத்து

### ஆதரவாளர்களை திருப்திப்படுத்த முயலும் அமைச்சர் விதுர

றிப்தி அலி

புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் நெருங்கிய ஆதரவாளர்கள் மூவரின் ஹஜ் பயணத்துக்காக சுமார் 55 இலட்சம் ரூபாவை ஹஜ் நிதியத்திலிருந்து வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தன.

இந்த அறிவுறுத்தல் புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. 02 பக்கம்



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நாட்டுக்கு வருகைதந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலர் வினய் மோகன் குவத்ரா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பு அமைச்சில் நேற்று (11) சந்தித்து கலந்துரையாடினார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க ஆகியோரும் இதன்போது பங்கேற்றிருந்தனர்.

## பிக்குகளின் ஒழுக்கத்தில் கவனம் செலுத்தும் அரசு

### விரைவில் சபைக்கு வருகிறது சட்டமூலம்



நா. தினுஷா

பிக்குகளின் ஒழுக்கம் மற்றும் பௌத்த சாசனத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து எதிர்வரும் இரு மாதங்களில் பிக்கு கருத்தாடல் சட்டமூலமொன்றை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அந்தச் சட்டமூலத்தின் வரைவு மேற்பார்வைக்காக மகாசங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும், மத குரோதத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று அமைச்சரவை பேச்சாளரும்... 02 பக்கம்

## ஈஸ்ரர் தின தாக்குதல்:

### ரூ.15 மில்லியனை நட்டஈடாக செலுத்தினார் மைத்திரிபால



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டமைக்காக உயர் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 15 மில்லியன் ரூபாவை நட்டஈடாக செலுத்தியுள்ளார்.

100 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பிரகாரம், இந்த தொகை நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி... 02 பக்கம்

## உஷ்



இரும்பினால் செய்யப்பட்ட பாலங்களை பாதுகாக்க விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்கிறதாம் அரசு.

இரும்பினாலான பாலங்களில் ஆணிகளை கழற்றும் செயற்பாடுகளை திட்டமிட்ட குழுவொன்று மேற்கொள்வதால் அது மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்பதுடன் பாலத்தின் உறுதித்தன்மைக்கும் பாதுகாப்பில்லை என்பதால் அவற்றை பாதுகாக்க ஆலோசனை செய்யப்பட்டுள்ளது.

நேற்று ஜனாதிபதியின் தலைமையில் கூடிய தேசிய பாதுகாப்புச் சபை கூட்டத்திலும் இது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தகவல்.

## சனத்தொகை, குடியிருப்பு கணக்கெடுப்பு அவசியம்

### அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

2023 - 2024 ஆம் ஆண்டுகளுக்கான சனத்தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட வேண்டுமென உத்தரவிட்டு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசியக் கொள்கை அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

## தீவிரம்பெறும் அம்மை நோய்

### 12 குழந்தைகள் சிறுவர் வைத்தியசாலையில்

கே. சுபானி

அம்மை நோய்க்கான தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாத சிறுவர்களிடையே அந்நோய் தீவிரமாக பரவி வருவதாகத் தெரிவித்துள்ள பொரளை லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா, அம்மை நோய் என சந்தேகிக்கப்படும் நோயால் பாதிக்கப்பட்ட 12 குழந்தைகள் அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## நாளொன்றில் 222 டெங்கு நோயாளர்கள்



கே. சுபானி

நாட்டில் நாளொன்றுக்கு சராசரியாக 222 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்படுவதாக தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு நடப்பாண்டில் இதுவரையான காலப்பகுதிக்குள் 51ஆயிரத்து 768 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 32 பேர் உயிரிழந்துள்ளதாக நேற்று (11) அறிவித்தது. 02 பக்கம்

## நடப்பாண்டு விபத்தில் 1,126 பேர் உயிரிழப்பு

கே. சுபானி

2023 ஆம் ஆண்டின் நேற்று வரையான காலப்பகுதிக்குள் வாகன விபத்துகளால் ஆயிரத்து 192 பேர் உயிரிழந்துள்ளனர் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனவரி முதல் ஜூலை 09ஆம் திகதிவரையில் இடம்பெற்ற ஆயிரத்து 126 வாகன விபத்துகளில் இதுவரை ஆயிரத்து 192 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் சாரதிகளின் கவனயீனமே அதிகளவான வாகன விபத்துக்களுக்கு பிரதான காரணம் எனவும் நிஹால் தல்துவ மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். 02 பக்கம்

## நெருக்கடிக்கு ரணிலே பொறுப்பு

### விமல் எம்.பி குற்றச்சாட்டு

02 பக்கம்



## பொறுப்பை ஏற்பதற்கு தயாராக உள்ளேன்

### நேர்மையான காரணங்களை முன்வைக்கக் கோருகிறார் கெஹேலிய



நா. தினுஷா

சுகாதாரத் துறை பிரச்சினைகள் தொடர்பில் ஒரு தரப்பை மாத்திரம் குற்றஞ்சாட்ட முடியாது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பால் நாங்கள் செயற்பட்டதில்லை. 02 பக்கம்

## பஸ்களுக்கான தண்டப்பணம் ரூ. 5 இலட்சம் வரை உயரும்

### அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

நா. தினுஷா

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய ஆகிய மாகாணங்களில் பெருந்தொகையான பஸ்கள் அனுமதிப் பத்திரங்களின்றி போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. 02 பக்கம்

## எரிபொருள் ஒழுங்குவிதிகள் சட்டம் திருத்தியமைப்பு



### வர்த்தமானி வெளியிட்டு அரசாங்கம் அறிவிப்பு

நா. தினுஷா

எரிபொருள் உற்பத்தி அனுமதிப் பத்திரத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் எரிபொருள் இறக்குமதி, ஏற்றுமதி, விற்பனை, விநியோகம் அல்லது பகிர்ந்தளிப்பதற்காக நபரொருவர் அல்லது தனியார் நிறுவனத்துக்கு அனுமதிப் பத்திரம்... 02 பக்கம்

### நீதித்துறை ஸ்தம்பிதம்!...

வகையில் கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

இதற்கு கண்டனம் வெளியிடும் வகையில் வட மாகாணத்திலுள்ள நீதித்துறை சார்ந்தோர் தமது பணியை புறக்கணிப்பதற்கு தீர்மானித்தனர். அதனடிப்படையில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நீதிபதிகளும் சட்டத்தரணிகளும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் சட்டத்தரணிகள் பணிக்கு சமுகமளிக்காமல் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். மேலும், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள சட்டத்தரணிகள் சங்கங்கள் இணைந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றையும் முன்னெடுத்திருந்தன.

### தேவையுடையோருக்கு...

அதற்கமைய, அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் நிறைவடைந்தாலும் தொடர்ச்சியாக, ஜனாதிபதி செயலகம், அரசாங்க அதிபர் அல்லது பிரதேச செயலகங்களுக்கு விண்ணப்பங்களை முன்வைக்க முடியும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (11) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்நிலையில், அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பான மேன்முறையீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள தினம் நிறைவடைந்தாலும் நிவாரணத்தை இழந்த வறுமையில் இருக்கும் ஒவ்வொருவரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது முறைப்பாடுகளை பதிவு செய்யமுடியும். ஜனாதிபதி செயலகம், அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் நிவாரணத்துக்கான விண்ணப்பங்களை முன்வைக்கவும் முடியும்.

நாட்டில் நேற்று (நேற்று முன்தினம்) வரை அஸ்வெசும வேலைத்திட்டம் தொடர்பில் 9 இலட்சத்து 68 ஆயிரம் மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த மேன்முறையீடுகள் அனைத்தும் அரசாங்க அதிபர், பிரதேச செயலாளரினூடாக முறையாக பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றது. இருந்தபோதும், இவர்களுள் 6 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் இந்த நிவாரணத்தை பெற்றுக்கொள்பவர்களாக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நிவாரணம் வழங்குவது தொடர்பில் அவர்களுக்கு எந்த சிக்கலும் இல்லை. தமக்கு தற்போது கிடைக்கும் நிவாரண தொகையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாகவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அடுத்த மாதமாகும்போது இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்குமென்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

### நெருக்கடிக்கு...

கடன் பெற்று சுகபோகங்களை அனுபவித்ததாலேயே நாடு நெருக்கடியை சந்தித்தது. மீண்டும் அதனையே செய்கிறார்கள். இதனால், நாட்டின் கடன் மேலும் அதிகரிக்கும். நாடு பொருளாதார ரீதியாக நெருக்கடியை சந்தித்ததற்கு பொறுப்புக் கூற வேண்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே, அதற்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதாக கூறுவது ஆச்சரியமாக இருப்பதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவங்ச தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங் களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

கடன் பெற்று சுகபோகங்களை அனுபவித்ததாலேயே நாடு நெருக்கடியை சந்தித்தது. மீண்டும் அதனையே செய்கிறார்கள். இந்தியாவிடம் கடன் பெறுகிறார்கள். உலக வங்கியில் கடன் பெறுகிறார்கள். ஜப்பானையும் எதிர்பார்க்கிறார்கள். இதனால் கடன்தொகையே மேலும் அதிகரிக்கும். கடன் தவணை செலுத்தாமையினால் ஒரு வருடத்துக்கு 6 பில்லியன் ரூபா செலுத்தவேண்டிய தேவையும் இருக்கிறது. இவ்வாறு இருக்கையில் மேலும் கடன் தொகையை அதிகரிக்கவே முயற்சிக்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தியதன் பிரதான பொறுப்பாளரே தற்போது நெருக்கடிக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதாக பொறுப்பை ஏற்றுக்கொள்கிறார். இதனை சரியாக பார்த்தால் எமக்கே பித்து பிடிக்கும்.

பயம் கொண்டவர்களே, இந்த நெருக்கடி மேலும் அதிகரித்தால் நாங்கள் ஆட்சியை பொறுபேற்க மாட்டோம் என்று கூறுபவர்கள். அவ்வாறு பயங்கொள்பவர்களால் நாட்டை எழுச்சிப் பாதையில் கொண்டுச் செல்ல முடியாது. தற்போதுள்ள நிலைமையில், எந்த சவாலாக இருந்தாலும் அதனை நாங்கள் பொறுப்பேற்போம் என்று முற்போக்காக சிந்திக்க கூடிய தலைவர்களே பொறுப்பை ஏற்கவேண்டும். தன்னால் முடியாது என்று கருதுபவர்களால் ஆட்சி செய்ய முடியாது.

### நடப்பாண்டு...

இதேவேளை நேற்றுமுன்தினம்(10) காலை 06மணியுடன் நிறைவடைந்த 24மணிநேரத்தில் நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன் 96இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அந்தவகையில் பொலன்னறுவை, மன்னம்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டலீய பாலத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) இடம்பெற்ற பஸ் விபத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 12 பேர் உயிரிழந்துள்ளதுடன் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

சாரதியின் கவனயீனத்தால் குறித்த பயணிகள் பஸ் பாலத்தை விட்டு விலகி ஆற்றில் வீழ்ந்து நீரில் மூழ்கி இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்படும் நிலையில் குறித்த பஸ் சாரதி நேற்றுமுன்தினம் (10) கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை அம்பன்பொல, புசல்லாவை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் (10) இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் 37 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் (10) கொழும்பிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற கெப் ரக வாகனமொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து இரண்டு முச்சக்கர வண்டிகள் மற்றும் அருகிலிருந்த கடையொன்றின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இவ்விபத்தில் முச்சக்கரவண்டியிலிருந்த பெண்ணொருவரும் இளைஞரொருவரும் படுகாயமடைந்தநிலையில் வரக்காபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### பிக்குகளின் ஒழுக்கத்தில்...

அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மத குரோதத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். எமது தேசம், சமயம், இனம், குலம், வர்க்கம் போன்ற பிரச்சினைகளினால் பெரும் அசௌகரியங்களை சந்தித்த நாடாகும்.

பிக்குகளின் ஒழுக்கம் மற்றும் புத்த சாசனத்துக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து பிக்கு கருத்தாடல் சட்டமூலமொன்றை எதிர்வரும் இரு மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக புத்த சாசனம் மற்றும் கலாசார செயற்பாடுகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் சோமரத்ன திஸாநாயக்க அறிவித்திருக்கிறார்.

அந்தச் சட்டமூலத்தின் இறுதி வரைவு மகா சங்கத்தினரின் மேற்பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மகாநாயக்கர்களின் நிலைப்பாடுகள் மற்றும் யோசனைகள் கிடைத்தவுடன் அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

### தீவிரம்பெறும்...

இதுகுறித்து தீபால் பெரேரா ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளதாவது,

அம்மைநோய் என சந்தேகிக்கப்படும் நோயால் பீடிக்கப்பட்ட 12 குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் ஒரேநாளில் 4 குழந்தை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் தடுப்பூசிகள் எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை. இதனால் குழந்தைகளிடையே அம்மைநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அம்மைநோய்க்கான தடுப்பூசிகள் 9 மாதம் மற்றும் 3 வயதில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். மேற்படி தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாத குழந்தைகளிடையேயே தற்போது அம்மை நோய்ப்பரவல் ஏற்பட்டுள்ளது.

எனவே, பெற்றோர் தங்களின் குழந்தைகளுக்கு குறித்த தடுப்பூசியை தவறாமல் பெற்றுகொடுக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ரூ.55 இலட்சம்...

களுத்துறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் கிராமமொன்றைச் சேர்ந்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவின் ஆதரவாளர்கள் மூவர் தற்போது புனித ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்கா சென்றுள்ளனர்.

இவர்களை அழைத்துச் சென்ற ஹஜ் முகவருக்கே குறித்த தொகைப் பணத்தை வழங்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த வருடத்துக்கான ஹஜ் குழுவின் தலைவர் இப்றாஹீம் அன்சாரின் சிபாரிசின் மூலமே இந்த பாரிய தொகை பணத்தை ஹஜ் நிதியத்திலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் சொத்தான ஹஜ் நிதியத்திலுள்ள பல கோடி ரூபா பணம், புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் தேவையற்ற செலவுகளுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையிலேயே தனது ஆதரவாளர்களின் ஹஜ் பயணத்துக்காக குறித்த நிதியத்திலிருந்து நிதியை வழங்குமாறு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஈஸ்ரர் தின தாக்குதல் ..

என்ற ரீதியில் ஓய்வூதியமாக 97,500 ரூபாவையும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் கொடுப்பனவுகள் நீங்கலாக 54,285 ரூபாவையும் வருமானமாகப் பெறுவதாக மைத்திரிபால தனது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஜூன் 28ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட 100 மில்லியன் ரூபாவில் தலா 10 மில்லியன் ரூபா மற்றும் 5 மில்லியன் ரூபா வீதம், 15 மில்லியன் ரூபா ஈஸ்ரர் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களின் நிதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், எஞ்சிய 85 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகையை அடுத்த வருடம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி முதல் 10 தவணைகளாக வழங்குவதற்கு அனுமதி வழங்குமாறும் முன்னாள் ஜனாதிபதி கோரியுள்ளார்.

### கைவிடப்பட்டது...

பேச்சுவார்த்தை மூலம் இதற்கான தீர்வுகள் கிடைக்கப்பெறும் என எண்ணியிருந்தபோது தேசிய வைத்தியசாலையின் இரசாயன ஆய்வுகூடத்துக்கு பொறுப்பாகவுள்ள ஒரு சில அதிகாரிகள் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கியுள்ளனர்.

இதனால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் தனியாருக்கு வழங்கப்பட்டது. இதனால் பல நோய்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. பல நிர்வாக குழறுபடிகள் இடம்பெற்றன. இதனால் இரசாயன ஆய்வுகூட சேவைப்பிரிவில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்தோம்.

இந்நிலையில் சுகாதார சேவைகள் சங்கத்தினால் கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்பட்டது. அந்த கலந்துரையாடலில் பல்வேறு பிரதான பிரச்சினைகளுக்காக தீர்வுகள் எட்டப்பட்டன. இவ்வாறு எடுக்கப்பட்டுள்ள தீர்வுகள் இன்று (12) முதல் தேசிய வைத்தியசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் என நினைக்கின்றோம்.

இதனால் நாளை (இன்று) முன்னெடுக்கவிருந்த வேலைநிறுத்தத்தை கைவிடுவதற்கு தீர்மானித்துள்ளோம். எனினும், எதிர்வரும் புதன்கிழமை (19) இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானித்திருந்தோம். எடுக்கப்பட தீர்மானங்கள் எதிர்வரும் புதன்கிழமைக்குள் நிறைவேற்றப்படுமாயின் இவ்வேலைநிறுத்தப் போராட்டத்தை முழுமையாக கைவிட முடியும்.

அத்தோடு கொழும்பு தேசிய வைத்தியசாலை தடையின்றி வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்ளவும் நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டும் உயர் தரத்திலான சேவையைப் பெற்றுக்கொடுக்க தீர்மானித்தோம்.

அரச மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் சங்கம் என்ற ரீதியில் பொதுமக்களுக்கு சிறப்பான சேவையை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்றார்.

### பஸ்களுக்கான ...

இவ்வாறான குற்றங்களுக்கு விதிக்கப்படும் 10,000 ரூபா தண்டப் பணத்தை 5 இலட்சம் ரூபா வரையில் அதிகரித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தை திருத்துவதற்கு யோசனை முன்வைத்து சட்டமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அராசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னம்பிட்டிய பஸ் விபத்து தொடர்பில் எங்களின் கவலையை தெரிவித்துக்கொள்கிறோம். சாரதியின் கவனயீனம் காரணமாகவே இந்த உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிக்கைகமைய, இந்த பஸ் தேசிய போக்கவரத்து ஆணைக்குழுவில் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருக்க வில்லை என்பதும் கிழக்கு மாகாண சபையினால் 2008 ஆம் ஆண்டு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதிப் பத்திரத்தின் உரிமையாளர் இதற்கு முன்னர் 2009 ஆம் ஆண்டு 10,000 ரூபா தண்டப் பணத்தையும் செலுத்தியுள்ளார். அதன்பின்னரே தற்போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இதுபோன்ற விபத்துச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகம் பதிவாகுவதால், இவ்வாறான குற்றங்களுக்கு விதிக்கப்படும் 10,000 ரூபா தண்டப் பணத்தை 5 இலட்சம் ரூபாவரையில் அதிகரித்து தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்தை திருத்துதல் உள்ளிட்ட மேலும் சில திருத்தங்களை மேற்கொள்ளுமாறு யோசனைகளை முன்வைத்து சட்டமா அதிபருக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளேன்.

முச்சக்கரவண்டி, பாடசாலை வேன், அலுவலக வாகனங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு பெற்றுக்கொடுக்கும் வகையில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் சட்டமா அதிபருக்கு யோசனை முன்வைத்துள்ளேன்.

வடக்கு, கிழக்கு மற்றும் வட மத்திய ஆகிய மாகாணங்களில் பெருந்தொகையான பஸ்கள் அனுமதிப் பத்திரங்களின்றி போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இரகசிய பொலிஸார், பாதுகாப்புப் பிரிவினர் மற்றும் அந்தப் பிரதேசங்களில் இருக்கும் மக்கள் வழங்கும் தகவல்களுக்கமைய பஸ்ஸில் பயணிக்கும்போதே சம்பந்தப்பட்ட இடங்களில் பணத்தை வீசிச் செல்லும் சந்தர்ப்பங்களும் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. வடக்கு, கிழக்கிலிருந்து வரும் பஸ்கள் பணத்தை வீசிவிட்டு செல்வதாக பல்வேறு முறைப்பாடுகள் காணப்படுகின்றன.

இதுதொடர்பில் அமைச்சரவைக்கும் அறிவித்திருக்கிறேன். இவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் சகலதையும் ஒழுங்குபடுத்தும் வகையில் சட்டத்தை உருவாக்குமாறு அமைச்சரவைக் யோசனை முன்வைத்துள்ளேன். முறையற்ற தற்காலிக அனுமதிப் பத்திரங்களை கொண்டவர்களுக்கு 30,000 ரூபாவிலிருந்து 30 இலட்சம் ரூபா வரையில் தண்டபணம் விதிப்பதற்கான அமைச்சரவை பத்திரமொன்றையும் சமர்ப்பித்துள்ளேன். ஆனால் அதனை அமைச்சரவை அனுமதிக்கவில்லை. பல்வேறு யோசனைகளை முன்வைத்தார்கள். அதன் பிரகாரம் புதிய விதிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

### பொறுப்பை ஏற்பதற்கு...

நாங்கள் ஊழல்செய்கிறோம், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்கள், தனிப்பட்ட தேவைகளுக்காக செயற்பட்டோம் என்பதை யாராவாது காரணங்களுடன் நேர்மையாக ஒப்புவிப்பார்களேயானால் அதற்கான பொறுப்பை நான் முழுமையாக ஏறுக்கொள்ளத் தயாராகவுள்ளேன். சுகாதார துறைமீது முன்வைக்கப்படும் நேர்மையான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பகிரங்கமான கலந் துரையாடலுக்கு தயாராக இருப்பதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (11) இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் ஐந்து மாதங்களுக்குத் தேவையான மருந்துகளை இறக்குமதி செய்ய 67 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. அதுதொடர்பில் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, நிதி அமைச்சின் செயலாளர், ஜனாதிபதி செயலாளர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் இந்த கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. இந்த கலந்துரையாடலின் இறுதியில், இந்த நிதி தொகையை ஐந்தால் பிரித்து ஒரு மாதத்துக்கு இரண்டு கட்டங்களால் நிதியை பெற்றுக்கொடுக்க இணக்கம் காணப்பட்டது. இன்று (நேற்று) அதில் முதலாம் கட்ட நிதி கிடைக்கப்பெற்றது. இந்த மாத நடுப்பகுதியில் மிகுதிப் பணம் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். நிச்சயமாக இணக்கம் தெரிவிக்கப்பட்ட நிதியை பெற்றுக்கொடுக்க நிதி இராஜாங்க அமைச்சர் உள்ளிட்டோர் எனக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்கள். சுகாதாரத் துறையிலிருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஒரு தரப்பை மாத்திரம் குற்றஞ்சாட்ட முடியாது. சுகாதாரப் பிரிவில் பல்வேறு பிரச்சி னைகள் இருக்கின்றன. 2019 ஆம் ஆண்டு முதல் வெவ்வேறு பிரச்சினைகள் உருவாகியுள்ளன. 2020 ஆம் ஆண்டு செலுத்த வேண்டியிருந்த நிதி இன்னும் செலுத்தப்படவில்லை.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதி ஒதுக்கீட்டுக்கு அப்பால் நாங்கள் செயற்பட்டதில்லை. அவ்வாறு இல்லை நாங்கள் ஊழல்செய்கிறோம், சுகாதார அமைச்சின் அதிகாரிகள் ஊழல் நிறைந்தவர்கள், தனிப்பட்ட தேவைகளுக்காக செயற்பட்டோம் என்பதை யாராவாது காரணங்களுடன் நேர்மையாக ஒப்புவிப்பார்கள் என்றால் அதற்கான பொறுப்பை நான் முழுமையாக ஏறுக்கொள்ளத் தயாராகவுள்ளேன். அவ்வாறான சந்தர்ப்பம் எதுவும் இருக்குமாக இருந்தால் அதனை நிரூபிக்கவேண்டும். அந்த சவாலை ஏற்பது மாத்திரமின்றி அதற்கான நிவாரணத்தை வழங்கவும் தயாராக இருக்கிறோம். தனிப்பட்ட நோக்கங்களுக்காக செயற்ப டுபவர்களுக்கு நாங்கள் பதிலளிக்க வேண்டிய தில்லை. அவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்கள் சாதகமான காரணங்களை சமர்ப்பிக்கவேண்டும். தவறுகள் இடம்பெற்றிருக்குமாக இருந்தால், அவற்றுக்கான சாதகத்தன்மையின் அடிப்படையில் கலந்துரையாடுவதற்கும் தயாராக இருக்கிறோம். ஆனால், தாம் நினைத்தது போன்று குற்றச்சாட்டுக்களை முன்வைப்பவர்களை முழுமையாக மறுக்கிறோம். அதுமாத்திரமல்ல அவர்கள் தனிப்பட்ட நோக்கங்களுக்காகவே செயற்படுகிறார்கள்.

### நாளொன்றில்...

இதேவேளை, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நாடுமுழுவதும் தற்போது மழையுடன்கூடிய சீரற்ற காலநிலை நிலவி வருகின்ற நிலையில் பொதுமக்கள் டெங்கு நுளம்பு பெருகும் அபாயமுள்ள இடங்கள் குறித்து மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும் என எச்சரிக்கப்படுகிறது.

இந்நிலையில் நாளை வியாழக்கிழமை (13) முதல் நாடளாவிய ரீதியில் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

வாரந்தோறும் வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய தினங்களில் இந்த வேலைத்திட்டம் அமுலில் இருக்கும் என அதன் பணிப்பாளர் கலாநிதி நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார். இதற்காக முப்படையினரின் ஆதரவும் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில் டெங்கு பரவல் குறித்து தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், நாடுமுழுவதும் 48 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அதிக ஆபத்துள்ள பகுதிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

நடப்பாண்டின் ஜனவரி முதல் ஜூலை 11ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 51ஆயிரத்து 768 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் குறித்த 06 மாத காலப்பகுதிக்குள் டெங்குவால் பாதிக்கப்பட்ட 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் இம்மாதம் முதல் 11ஆம் திகதி வரையான 11 நாட்களுக்குள் இரண்டாயிரத்து 448 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்தவகையில் கொழும்பில் 11ஆயிரத்து 158 பேரும் கம்பஹாவில் 11ஆயிரத்து 324 பேரும் களுத்துறையில் 3 ஆயிரத்து 353பேரும் கண்டியில் 3ஆயிரத்து 375 பேரும் புத்தளத்தில் 2ஆயிரத்து 803 பேரும் குருநாகலையில் ஆயிரத்து 873 பேரும் கேகாலையில் 2ஆயிரத்து 45பேரும் இரத்தினபுரியில் 2ஆயிரத்து 39 பேரும் மட்டக்களப்பில் 2ஆயிரத்து 18 பேரும் திருகோணமலையில் ஆயிரத்து 857 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### எரிபொருள்...

வழங்கப்படவுள்ளதாகவும் அதற்கமைய, எரிபொருள் உற்பத்தி தொடர்பான ஒழுங்குவிதிகள் சட்டம் திருத்தியமைக்கப்படுவதாகவும் தெரிவித்து மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சரினால் நேற்று முன்தினம் (10) இந்த வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன் அந்த திருத்தங்களுக்கமைய அனுமதிபெறும் ஒவ்வொரு தரப்பினரும் 2 மில்லியன் அமெரிக்க டொலர் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வர்த்தமானியில் மேலும்,

அமைச்சின் செயலாளரிடம் விண்ணப்பம் கோருவதனூடாக அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையில் எரிபொருள் இறக்குமதி , ஏற்றுமதி, விநியோகம் அல்லது பகிர்ந்தளித்தல் என்பவற்றை முன்னெடுப்பதற்காக விண்ணப்பிக்கும் நபர் அல்லது தனியார் நிறுவனம் அவர்களுக்கு இருக்கும் நிதி மற்றும் தொழில்நுட்ப வாய்ப்புக்களை உறுதிப்படுத்தும் வகையிலான யோசனையை முன்வைக்க வேண்டும்.

அவ்வாறான விண்ணப்பங்கள் மற்றும் யோசனைகளை கருத்தில் கொள்ளும் போது, அமைச்சினால் நியமிக்கப்படும் குழுவினால விண்ணப்பதாரருக்கு இருக்கும் நிதி மற்றும் தொழில்நுட்ப வசதிக்கு ஏற்ற தொழிற்றுறைசார் தரத்தின் அடிப்படையில் முறையான அனுமதியை வழங்கும்.

விண்ணப்பதாரர் தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறுவனமாக ஒன்றிணையவேண்டும் என்பதுடன், முதலீட்டுச் சபை சட்டத்திலுள்ள விதிமுறைகளுக்கமைய செயற்படவும் விண்ணப்பிக்கும் நோக்கத்தின் அடிப்படையில் குழுவினால் பரிந்துரைக்கப்படும் வேறேதும் அதிகாரசபையுடன் ஒப்பந்தத்துக்கு வரவேண்டியது அவசியமாகும்.

அனுமதி வழங்கப்பட்ட செயற்பாடானது அனுமதிப்பத்திரத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன் விதிமுறைகளுக்கமைய செயற்படவேண்டியதும் அவசியமாகும்.

மேலும், இலங்கை எரிபொருள் தொகை களஞ்சிய நிறுவனத்திடமிருந்து உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய சகல அனுமதிபெற்ற தரப்பும், 2 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலுத்தப்பட்டதன் பின்னர், அது 20 வருடங்களுக்கு செல்லுப்படியாகும். இன்னுமொரு தரப்புக்கு ஒப்படைக்க முடியாது என்பதுடன் ஒப்பந்தத்தை புதுப்பிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

அனுமதிபெற்ற ஒவ்வொரு தரப்பும் செயலாளரினால் குறிப்பிடப்படும் தினம் அல்லது அந்த தினத்துக்கு முன்னர் ஒவ்வொரு வருடமும் அனுமதிப்பத்திர கட்டணத்தை செலுத்த வேண்டும்.

ஒருவேளை அனுமதிப்பத்திரக் கட்டணம் செலுத்தத் தவறினால் குறிப்பிட்ட தினத்திலிருந்து வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் அமைச்சரினால் இரத்துச் செய்யப்படும் என்பதும் அனுமதிப் பெற்ற தரப்பினர் விதிமுறைகளை மீறும் பட்சத்தில் காரணங்களை குறிப்பிட்டு அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்ய செயலாளர் நடவடிக்கை எடுப்பார்.

அவ்வாறு அமைச்சின் செயலாளரினால் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் பட்சத்தில் இரத்து செய்யும் தினத்தை குறிப்பிட்டு குறித்த தரப்புக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் தினமொன்றை குறிப்பிட்டு தவறை சரிசெய்வதற்கும் வாய்ப்பை வழங்கவும் செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது.

அவ்வாறு, அனுமதிப்பத்திரம் முறையை தரப்பு தவறை சரி செய்தால், செயலாளர் திருப்தியடையும் பட்சத்தில் இரத்தை நீக்கமுடியும்.

அனுமதிபெற்ற தரப்பொன்று தனது காலத்துக்கான அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க விரும்பினால் அனுமதிப் பத்திரம் காலாவதியாகும் தினத்துக்கு ஆறுமாதங்களுக்கு முன்னர் அமைச்சின் செயலாளருக்கு எழுத்துப் பூர்வமாக கோரிக்கை விடுக்கவேண்டும். அதில் தமது யோசனைளையும் குறிப்பிட வேண்டும்.

அதேவேளை, இவ்வாறு அனுமதிப் பெறுபவர்களும் ஏதாவதொரு எரிபொருள் உற்பத்தி தொடர்பில் அல்லது அந்த எரிபொருள் உற்பத்தி காலத்துக்குக்காலம் இலங்கை அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ள தரம் மற்றும் செயற்பாட்டு முறைக்கமைய விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் ஏற்றுமதி செயற்பாட்டின்போது அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விசேட விதிமுறைகளுக்கமைய செயற்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## ஊழியர் சேமலாப நிதியம்

# நிலுவையையும் மாதாந்தக் கொடுப்பனவையும் முறையாகச் செலுத்த நடவடிக்கை எடுக்கவும்

### வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு ஆலோசனை




ஊழியர்களை பாதுகாத்துக்கொண்டு, ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தவேண்டிய நிலுவையையும் மாதாந்தக் கொடுப்பனவையும் முறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் ஹெக்டர் அப்புஹாமி பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையில் கடந்த 22 ஆம் திகதி கூடிய போதே குழுவின் தலைவர் மேற்கண்ட ஆலோசனையை வழங்கினார்.

சில பெருந்தோட்டத்துறை நிறுவனங்கள் EPF கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறியுள்ளதாகவும் பாரியளவான நிலுவை ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தவேண்டியுள்ளதாகவும் இதன்போது புலப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத்துறையில் சில நிறுவனங்களினால் செலுத்தப்பட்ட சுமார் 700 மில்லியன் ரூபா தொகை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் முரண்பட்ட நிலைமை காரணமாக கணக்கில் பதிவுசெய்ய முடியாமல் உள்ளதாகவும் இதன்போது தெரியவந்துள்ளது.

ஊழியர்களை பாதுகாத்துக்கொண்டு, ஊழியர் சேமலாப நிதியத்துக்குச் செலுத்தவேண்டிய நிலுவையையும் மாதாந்தக் கொடுப்பனவையும் முறையாகச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவர் ஹெக்டர் அப்புஹாமி பெருந்தோட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு இதன்போது ஆலோசனை வழங்கினார்.

அத்துடன், தேசிய அடையாள அட்டை இலக்கத்துக்கு அமைய கணக்குகளை ஆரம்பிப்பதன்மூலம் ஒரு நபருக்கு பல கணக்குகள் காணப்படும் சிக்கலை நீக்க முடியும் எனவும் அது தொடர்பில் கவனம் செலுத்தி செயற்படுமாறும் அதிகாரிகளுக்கு குழு ஆலோசனை வழங்கியது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.மரிக்கார், இஷாக் ரஹுமான், மஹிந்தானந்த அளுத்கமகே, வடிவேல் சுரேஷ், கே. சுஜித் சஞ்சய, எம். உதயகுமார், வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல, சந்திம வீரக்கொடி மற்றும் துஷார இந்துனில், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர், தொழில் திணைக்களத்தின் தொழில் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள், மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பெருந்தோட்டத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# பால் உற்பத்தி தொடர்பாக தேசியத் திட்டம் தயாரித்து அறிக்கை சமர்ப்பிக்குக

### கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்கு கோபா குழு பரிந்துரை




பால் உற்பத்தி தொடர்பாக தேசியத் திட்டமொன்று தயாரிக்கப்படுவது முக்கியமானது. இது தொடர்பில் இரண்டு வாரங்களில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுக்கு கோபா குழுவின் தலைவர் பரிந்துரை செய்துள்ளார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் 2019/2020/2021 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் தற்போதைய செயலாற்றுகை தொடர்பில் விசாரணை செய்வதற்கு அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தலைமையில் அண்மையில் (06) பாராளுமன்றத்தில் கூடியது. அதன்போதே அவர் அதிகாரிகளுக்கு மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தார்.

இந்நாட்டின் நாளாந்த பால் தேவையின் 40வீதம் தற்பொழுது உற்பத்தி செய்யப்படுவதாகவும் 60வீதம் பால் உற்பத்தி குறைவாகக் காணப்படுவதாகவும் இதன்போது புலப்பட்டது.

அதற்கமைய, பால் தேவையை பூர்த்தி செய்வதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் கோபா குழுவின் தலைவர் வினவியதுடன், ஒரு நாளைக்கு 100 லீற்றர்கள் உற்பத்தி செய்யக்கூடிய 15ஆயிரம் பண்ணைகளை உருவாக்குவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இதில் சுமார் 2ஆயிரம் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பான தேசியத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இரண்டு வாரங்களில் அறிக்கையொன்றை வழங்குமாறும் கோபா குழுவின் தலைவர் பரிந்துரைத்தார்.

அத்துடன், இம்புலத்தண்ட ஆடு இனப்பெருக்க நிலையத்திலுள்ள இறக்குமதி செய்யப்பட்ட 100 ஆடுகளுள் தனிமைப்படுத்தல் காலத்தில் 11 ஆடுகள் உள்ளடங்கலாக 38 ஆடுகள் இறந்துள்ளமை தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், ஆடுகளை இறக்குமதி செய்வதற்கான கொள்வனவு சபையின் அனுமதி 2017இல் கிடைக்கப்பெற்றுள்ளபோதும் இந்த ஆடுகள் 2019இல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் 2,311,760 ரூபா மேலதிகமாக செலுத்தவேண்டி ஏற்பட்டுள்ளமையும் இங்கு புலப்பட்டது.

அதற்கமைய, இது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையொன்றை வழங்குமாறு கோபா குழுவின் தலைவர் பரிந்துரை வழங்கினார்.

மேலும், கரந்தகொல்லை கால்நடை வளர்ப்பு நிலையத்தின் டிப்ளோமா பாடநெறியில் பதிவுசெய்த மாணவர்கள் பாடநெறியை இடையில் விட்டுச்செல்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. இந்தப் பாடநெறிக்கு சுமார் 100 மாணவர்கள் பதிவு செய்வதாகவும் ஒரு வருடத்துக்கு சராசரியாக 82 பேர் பாடநெறியை தொடர்வதற்கு பதிவு செய்வதாகவும் இதன்போது தெரிவிக்கப்பட்டது. எனினும், இவற்றில் சுமார் 25 பேர் பாடநெறியை இடையில் விட்டுச் சென்றுள்ளமையும் இந்த ஒவ்வொரு மாணவருக்கும் பாடநெறியை தொடர்வதற்கு சுமார் 2,600,000 ரூபா செலவாகுவதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

பாடநெறியை தொடர்ந்து வரும்போது வேறு தொழில் கிடைக்கும் பட்சத்தில் அவர்கள் பாடநெறியை விட்டுச்செல்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அதற்கமைய, ஒப்பந்தம் ஒன்றின் அடிப்படையில் இந்த மாணவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோபா குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் கால்நடை இனப்பெருக்கம் தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், செயற்கைக் கருத்தரிப்பு தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், கல்வி, பயிற்சி மற்றும் கடமை நோக்கில் வெளிநாடு சென்ற 09 அதிகாரிகள் மீண்டும் சேவைக்குத் திரும்பாமை காரணமாக அவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய 17,299,301 ரூபா தண்டப்பணத்தை அறவிடாமை தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சட்டரீதியான நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், தடுப்பூசி கொள்வனவு செய்யும் போது குறைந்த விலைமனு உள்ளபோது அதிக விலைமனு வழங்கிய நிறுவனத்திடமிருந்து 100,000 தடுப்பூசி வாங்கியமையால் 3,995,000 ரூபா மேலதிகமாக செலுத்தியுள்ளமை இங்கு புலப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான பிரசன்ன ரணவீர, காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான விமலவீர திசாநாயக்க, ஜயந்த கெட்டகொட, கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட மற்றும் இசுறு தொடங்கொட ஆகியோர் கலந்துகொண்டனர்.

# குழந்தைப் பாக்கியத்துக்காக கை வைத்தியம்; பெண் உயிரிழப்பு

கண்டி நிருபர்

மாத்தளை, சிகிரிய பிரதேச இளம் பெண் ஒருவருக்கு குழந்தைப் பாக்கியம் கிடைப்பதற்காக மின்னேரியாவில் மேற்கொள்ளப்பட்ட கை வைத்தியம் காரணமாக குறித்த பெண் நேற்றுமுன்தினம் (10) உயிரிழந்துள்ளார்.

மாத்தளை மாவட்டத்திலுள்ள சிகிரியா பிரதேசத்தைச் சேர்ந்த மேற்படி பெண்ணுக்கு மின்னேரிய பிரதேசத்தில் உள்ள ஆலயமொன்றில் கைமருந்து சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

திருமணம் முடித்து கடந்த மூன்று வருடங்களாக அவருக்கு குழந்தைகள் கிடைக்கவில்லை என்பதால் தந்தை வழி உறவினர் ஒருவரால் நடத்தப்படும் தேவாலயம் ஒன்றுக்குச் சென்று அங்கு கடந்த மூன்று தினங்களாக வைத்தியம் நடைபெற்றுள்ளது.

வயிற்றுப் போக்கு ஏற்படும் வகையில் மருந்துகள் கொடுக்கப்பட்டு வைத்தியம் செய்யப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இருப்பினும், அவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கடும் சுகயீனமுற்ற பெண்ணை ஜயந்திபுர வைத்தியசாலையில் அனுமதித்தபோது ஏற்கனவே அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# களனி பல்கலைக்கழகத்தின் பாலின வேறுபாடுகளுக்கான சர்வதேச மாநாடு




அஷ்ரப் ஏ சமத்

களனி பல்கலைக்கழகத்தின் பாலின வேறுபாடுகளுக்கான சர்வதேச மாநாடு கொழும்பு ரமடா ஹோட்டலில் களனி பல்கலைக்கழகத்தின் பாலின ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதன்போது களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பாலின ஆய்வு மைய ஸ்தாபகருமான மைத்திரி விக்கிரமசிங்க பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இம்மாநாட்டில் 70க்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இம்மாநாட்டில் உள்நாட்டு, வெளிநாட்டு ஆய்வாளர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்கள், கலாநிதி அனுசா எதிரிசிங்க, களனி பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் நிலந்தி டி சில்வா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சந்தன பி உடவத்த உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# 19 அரச கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்ற முடிவு

### அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவிப்பு

கண்டி நிருபர்

19 அரச கல்வியியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களாக மாற்றவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

திங்கட்கிழமை பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரிக்கு விஜயம் செய்து அதனைப் பார்வையிட்ட பின் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது 03 வருடங்களுக்கே கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். க.பொ.த. (உ/த) பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையிலேயே அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆனால், அவை பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்டதும் 04 வருடங்களுக்கு அவர்கள் கல்வி பயில சேர்த்துக் கொள்ளப்படுவர்.

இதன் காரணமாக பயிற்றப்பட்ட பட்டதாரிகள் உருவாகுவதற்கு வழிபிறக்கும்.

இதேவேளை, மாணவர் தொழிற்சங்கங்கள் உருவாகுவதற்கு எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்பட மாட்டாது.

இது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் ஒன்று தயாரிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமிய கலாசார நிகழ்வுகளை நடத்த உத்தரவு

இக்பால் அலி

இஸ்லாமிய புதுவருடமான எதிர்வரும் 20ஆம் திகதியன்று சகல முஸ்லிம் பாடசாலைகளிலும் இஸ்லாமிய கலாசார பண்பாட்டு விழுமிய நிகழ்வுகளை நடத்தி அத்தினத்தை சிறப்பிக்குமாறு கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகளின் அபிவிருத்திப் பிரிவுக்கான கல்விப் பணிப்பாளர் மேஜர் என்.ரீ.நசுமுதீன் உத்தரவிட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையானது முஸ்லிம் சமய கலாசார பாரம்பரிய விழுமியங்களுக்கு ஏற்ப மாணவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதனூடாக பரந்த கல்வி இலக்கை அடைய முற்படல் எனும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இஸ்லாமிய புதுவருடமாக முஹர்ரம் மாதம் காணப்படுகிறது. இம் மாதத்தின் முதல் தினத்தை (தலைப்பிறை) இஸ்லாமிய புதுவருடமாக முஸ்லிம்கள் கொண்டாடுகின்றனர். இவ்வாண்டு இஸ்லாமிய புது வருடம் (முஹர்ரம்) எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இத்தினத்தில் இஸ்லாமிய கலாசார நிகழ்வுகளுக்கு முன்னுரிமை வழங்கி மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பாடசாலைகளில் போட்டி நிகழ்ச்சிகளை நடத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிகழ்வுகளில் இஸ்லாமிய மார்க்க அறிஞர்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோரை இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ள அவர் அன்றைய தினத்தில் தாய் நாட்டினதும் நாட்டு மக்களினதும் மேம்பாட்டுக்காக பிரார்த்திக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.


## வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/


## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 27ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** ஞாபகமறதியால் முக்கிய சில காரியங்களைத் தவறவிடுவீர்கள். மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள்.

**ரிஷபம்:** உங்கள் கையில் உள்ள பணம், பொருள் என்பவற்றைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். தேவையற்ற செலவுகள்.

**மிதுனம்:** தொட்டது துலங்கும் நாள். தொழில், வியாபாரத்தால் அதிக நன்மைகளையும் இலாபத்தையும் அடைவீர்கள்.

**கடகம்:** செய்தொழிலில் பகைவர்களை வெற்றி கொள்வீர்கள். அரச நன்மைகள் உதவிகள் உண்டு.

**சிம்மம்:** எதிர்பாராத உறவினர் வருகையால் சற்று செலவுகள் உண்டு. பிள்ளைகளால் இலாபங்கள் உண்டு.

**கன்னி:** வீணான டென்ஷனால் மனதை போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**துலாம்:** கூட்டு வியாபாரத்தில் இலாபங்கள் உண்டு. காதல் களியாட்டங்கள் நிறைந்த நாள்.

**விருச்சிகம்:** விரோதிகளை புத்தியால் வெற்றி கொள்வீர்கள். நினைத்த காரியம் இன்று நிறைவேறும்.

**தனுசு:** அதிர்ஷ்டம் நிறைந்த நல்ல நாள். தெளிந்த மனதுடன் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள்.

**மகரம்:** கல்வியால் அனைத்து பெருமைகளையும் அடைவீர்கள். தான தர்மங்களால் மனநிறைவு கொள்வீர்கள்.

**கும்பம்:** குறுகிய பயணங்கள் மன உளைச்சளைத் தரும். இளைய சகோதர வகையில் உதவிகள் உண்டு.

**மீனம்:** வீண் மனக்குழப்பங்கள் வேண்டாம். நிதானமாக செயல்பட்டால் வெற்றி உங்களுக்கே.

**திதி:** தசமி பி.ப.5.59 வரை பின் ஏகாதசி (தேய்)

**நட்சத்திரம்:** பரணி; பி.ப.7.43 வரை பின் கார்த்திகை

**யோகம்:** மரண யோகம் பி.ப.7.43 வரை பின் அமிர்த யோகம்

**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** மு.ப. 8.57– 9.57 மணிவரை

**ராகுகாலம்:** 11.57 – 1.27 மணிவரை

**எமகண்டம் :** 7.27 – 8.57 மணிவரை

**குளிகை:** 10.27 – 11.57 மணிவரை

**சந்திராஷ்டமம்:** கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிர்ஷ்டம் :** அஸ்வினி, மகம், மூலம் (பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்:** ------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 12 ஆம் திகதி, புதன்கிழமை

# நந்திக்கடலும் அரசாங்கமும்!

இலங்கையில் இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற நந்திக்கடல் களப்பு பகுதியை சுற்றுலாத்தலமாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இலங்கையில் கடற்பகுதிகளில் உள்ள கவர்ச்சியான இடங்களைக் கண்டறிந்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வகையில் அவற்றை சுற்றுலாப் பிரதேசங்களாக மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இப்பகுதிகளை சுற்றுலாப் பிரதேசமாக மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், தனியார் முதலீடுகளை உள்ளடக்கிய வகையிலேயே இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

புத்தளம் களப்பு, நீர்கொழும்பு களப்பு, ப்ரீத்திபுர, கொக்கல களப்பு, கிரிந்த, எலிபன்ரொக், உப்புவெளி, சாம்பல்தீவு கடற்கரை, நாயாறு கடற்கரை மற்றும் நந்திக்கடல் களப்பு என்பன இதில் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இறுதிக்கட்டப் போர் நடைபெற்ற, பல்லாயிரம் மக்கள் உயிர்நீத்த, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் உடலை மீட்டதாக அரசு அறிவித்த பகுதியாக நந்திக்கடல் பகுதி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய இடங்களை சுற்றுலாத்தலமாகத் தெரிவுசெய்தமைக்கும், நந்திக்கடலை அதற்காகத் தேர்வுசெய்தமைக்கும் காரணங்கள் உள்ளன. அதாவது, இலங்கையின் உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டுவந்த இடமாக அந்த இடத்தைக் காட்டுவதற்கு எடுக்கப்படும் அரசாங்கத்தின் முயற்சி அதில் தெரிகிறது.

இந்த விடயத்தைத் தீர்மானித்த அரசாங்கம் அல்லது அமைச்சர்மார் எந்தளவு தூரம் மோசமாகச் சிந்தித்து இந்த முடிவுக்கு வந்திருக்க வேண்டும். உள்நாட்டுப்போர் முடிந்து இத்தனை வருடங்களாகியும் தமிழர் பிரச்சினையில் தீர்வில்லை. குறைந்தபட்ச அரசியல் தீர்வையாவது தமிழர்களுக்கு வழங்குவோம் என்றில்லை. ஆனால், தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமித்து நாட்டின் நலன் என்ற கோதாவில் பல விடயங்களை அரங்கேற்றுவதில் இலங்கை அரசு கண்ணாயிருக்கிறது.

வடக்கில் எத்தனையோ வனப்புமிக்க கரையோரப்பகுதிகள் உள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் அங்கு சுற்றுலாப் பயணம் சென்று வந்தாலும் அந்தப் பகுதிகள் எந்த அபிவிருத்தியும் செய்யப்படாமல் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன. அவற்றையெல்லாம் விடுத்து, வெறுமனே நந்திக்கடலை இலக்குவைத்து அந்தப் பகுதியை சுற்றுலாத்தலமாக மாற்ற அரசாங்கம் இலக்கு வைத்திருப்பது தமிழர்களின் உணர்வுகளுடன் விளையாடும் செயலன்றி வேறு எதுவாக இருக்க முடியும்?

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் கவனம் செலுத்த வேண்டும். 'நந்திக்கடல் யுத்தம்' என்று பெயரிட்டு புத்தகம் எழுதி அதனை சிங்கள மக்களிடம் விற்பனை செய்து வருமானம் பெறுவது போலல்ல இது. வருடாந்தம் தமிழர்களால் புனிதமாக நினைவுகூரப்படும் ஒரு பிரதேசம். தமிழர் விடுதலைக்காக ஆகுதியானவர்களின் ஆன்மாக்களை ஈர்ப்புடன் தாங்கிய பிரதேசமொன்றை சுற்றுலாத்தலமாகப் பிரகடனப்படுத்தும் அரசின் முயற்சி தண்டிக்கப்படவேண்டும். இது தமிழரின் வரலாற்றையும் அழிக்கும் ஒரு சதிச் செயல். தமிழர்களின் வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சும் செயலிது.

## இன்றைய நாளில்...

- 1562 – கத்தோலிக்க ஆயர் தியேகோ டெ லாண்டா, மாயாக்களின் பழம்பெரும் நூல்களைத் தீக்கிரையாக்கினார்.
- 1776 – கெப்டன் ஜேம்ஸ் குக், தனது மூன்றாவது கடற்பயணத்தை ஆரம்பித்தார்.
- 1799 – ரஞ்சித் சிங், லாகூரைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பஞ்சாபின் (சீக்கியப் பேரரசு) ஆட்சியைப் பிடித்தார்.
- 1898 – செனான் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1920 – சோவியத் - லித்துவேனிய அமைதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. லித்துவேனியாவை சோவியத் ஒன்றியம் தனிநாடாக அங்கீகரித்தது.
- 1971 – அவுஸ்திரேலியாவில் பழங்குடியினரின் கொடி முதன்முறையாகப் பறக்கவிடப்பட்டது.
- 2007 – வவுனியாவில் இலங்கை வான்படையின் கிபீர் வானூர்தியை விடுதலைப்புலிகள் சுட்டு வீழ்த்தினர்.

# கட்டுக்குள் வருமா மக்கள் தொகைப் பெருக்கம்?

**உதயை மு.வீரையன்**



உலக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கண்டு சமூக ஆர்வலர்கள் திகைத்து நிற்கின்றனர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டிருக்கும் மக்கள் தொகை எங்கு போய் முடியுமோ என்ற அச்சமும் ஏற்படுகிறது. இந்த அசுர வளர்ச்சி சமூக, அரசியல், பொருளாதாரத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

உலகின் ஒட்டுமொத்த மக்கள் தொகை 1950 வாக்கில் சுமார் 200 கோடியாக இருந்தது. கடந்த 70 ஆண்டுகளில் அது 800 கோடியாக வளர்ந்துள்ளது. இந்த அசுர வளர்ச்சி எப்படி ஏற்பட்டது? இந்த வளர்ச்சி இரட்டிப்பானால் இந்தப் பூமி தாங்குமா என்ற கவலையும் ஏற்பட்டுள்ளது.

வறுமை, விலைவாசி, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவை சமுதாயத்தை வாட்டி வதைக்கின்றன. இதற்கும் மேலாக காலநிலை மாற்றத்தின் காரணமாக வாழ்விடங்கள் சுருங்கிக் கொண்டு வருவதையும் நாம் கணக்கில் கொள்ள வேண்டும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் உணவு, இருப்பிடம் போன்ற இன்றியமையாத தேவைகள் அதிகரிக்கவே செய்யும். அதற்காகக் காடுகள், வயல்கள் அழிக்கப்படும். இயற்கை வளங்கள் மேலும் சூறையாடப்படும் என்ற கவலை சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய அச்சம் 19ஆம் நூற்றாண்டிலேயே தொடங்கி விட்டது. 1798இல் இங்கிலாந்தில் வாழ்ந்த தோமஸ் மால்தஸ் என்னும் பொருளாதார வல்லுநர், பெருகி வரும் மக்கள்தொகையைக் கண்டு திடுக்கிட்டார்.

கட்டுப்பாடின்றி மக்கள் தொகை பெருகினால் போதிய உணவு கிடைக்காமல் பஞ்சம் ஏற்படும் என்று நினைத்தார். இதுபற்றி ஒரு நூலும் எழுதினார்.

மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப உணவு உற்பத்தியின் அளவு போதுமானதாக இல்லை என்றும், அதனால் ஒரு கட்டத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டு சமூக ஒழுங்கு கெடுவதற்கு வாய்ப்புள்ளது என்றும் அவர் அந்நூலில் எழுதினார். இதற்குத் தீர்வு, ஏழைகளைக் குறைவாகக் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கட்டாயப்படுத்துவதுதான் என்று கூறினார்.

அன்றைய சமுதாயம் இதனை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் புறக்கணித்து விட்டது. இதை வெறும் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்சினையாகப் பார்க்கக் கூடாது. இது உழைக்கும் மக்கள் மீதான மேட்டுக்குடியினரின் வெறுப்பையும், ஆதிக்கத்தையுமே குறிக்கிறது என இடதுசாரிகள் கூறினர்.

ஐ.நா. அமைப்பின் கணக்கெடுப்பின்படி உலக மக்கள் தொகை 8.107 மில்லியன் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு சில நாட்களுக்கு முன் வெளியிடப்பட்டது. உலக மக்கள் தொகை பெரிய அளவில் அதிகரித்து வருவதையே இது காட்டுகிறது.

1700ஆம் ஆண்டுக்குப் பின் தொழிற்புரட்சியில் ஏற்பட்ட வேகம் மக்கள் தொகை வளர்ச்சியிலும் ஏற்பட்டது. 1960 முதல் 1995 வரை ஏற்பட்ட பசுமைப் புரட்சியின் விளைவாக வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்ட பெருக்கம், மருத்துவத்துறை வளர்ச்சி போன்ற காரணங்களினால் கடந்த 50 ஆண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி மேலும் வேகமடைந்தது.

எதிர்காலத்தில் உலக மக்கள் தொகை உச்சத்தை எட்டுமென்றும் பின்னர் பொருளாதாரக் காரணங்கள், நிலப் பற்றாக்குறை, உடல்நலக் குறைபாடுகள், சுற்றுச்சூழல் சீர்கேடுகள் போன்ற காரணங்களால் குறையத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகைய மக்கள் தொகை அதிகரிப்பால் முதியோரின் அதிகரிப்பும் வேகமாக உள்ளது.

இதற்கு சமூக ஆர்வலர்கள் கட்டுப்பாடு வேண்டும் என்று கூறுகின்றனர். மக்கள் தொகைக் கட்டுப்பாடு என்பது மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதாகும். பொதுவாக இது பிறப்பு விகிதத்தைக் குறைப்பதால் மட்டுமே ஏற்படும்.

பண்டைய கிரேக்கத்தில் முதன்முதலாக மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. மக்கள் தொகையைக் கட்டுப்பாட்டில் வைக்க சிசுக்கொலை, கருக்கலைப்பு போன்றவை ஊக்குவிக்கப்பட்டன.

கட்டாய மக்கள் தொகை கட்டுப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக சீன மக்கள் குடியரசின் 'ஒரு குழந்தை' கொள்கையைக் கூறலாம். இதன்மூலம் ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றுக்கொள்வது கடினமான வாழ்க்கையாக மாற்றப்பட்டது.

(05ஆம் பக்கம் பார்க்க)

# எதிரிகள் நமக்குத் தேவை...

**முனைவர் என்.பத்ரி**



மனிதனை சமூகவிலங்கு என்கிறோம். அவன் தனிமையை விரும்புவதில்லை. மற்ற மனிதர்களுடன் அன்றாடம் கலந்துரையாட வேண்டிய சூழ்நிலையில் அவன் இருக்கிறான்.

நாம் ஒவ்வொருவரும் வயது, அறிவு, பொருளாதாரப் பின்புலம், வாழும் சூழ்நிலை, வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டம் போன்றவற்றில் வேறுபடுகிறோம். இதனால், சமூகத்தில் நம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அடையாளங்கள் உருவாகிவிடுகின்றன. இது இயற்கையானதும், தவிர்க்க முடியாததுமாகும். இதன் காரணமாக நம்மிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

நம்முடைய வாழ்க்கையில் எதிரிகள் தொல்லை என்பது எல்லா காலகட்டத்திலும் நிச்சயம் இருக்கும். பொதுவாழ்வில் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் எதிர்த்து கேள்வி கேட்பவர், தவறுகளை சுட்டிக் காட்டுபவர் இல்லையென்றால் அவரால் நல்ல தலைவராகப் பிரகாசிக்க முடிவதில்லை.

அதனால், எதிரிகளின் தொல்லை தனிமனித வாழ்விலும், தொழிலிலும் தவிர்க்க முடியாதவை. நமக்கு இசைவான கருத்துகளைக் கொண்டவர்கள் நமது நண்பர்களாகவும், எதிர்மறைக் கருத்து கொண்டவர்கள் எதிரிகளாகவும் உருவாகிறார்கள். நண்பரை எதிரியாக்கிக்கொள்வதும், எதிரியை நண்பராக்கிக் கொள்வதும் நமது அணுகுமுறையில்தான் இருக்கிறது.

நாம் நம்முடைய எதிரியை பலவீனமாகக் கருதக்கூடாது. மாறாக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். எப்பொழுதும் யாரிடம் பேசினாலும், கனிவாகவும், மரியாதையுடனும் பேசுவது அவசியம். நண்பர்கள் மட்டும் நமக்கு நல்லது செய்வதில்லை. பல சமயங்களில் நமது எதிரிகளும் நமக்கு நல்லது செய்கிறார்கள். நாம்தான் அவர்கள் மேல் உள்ள வெறுப்பில் அவர்களுடைய வார்த்தைகளை மதிப்பதில்லை.

நம்மை விட நமக்கு வேண்டாதவர்களுக்குத்தான் நம்மைப் பற்றி அதிகமாகத் தெரியும். நமது குறைகளை நேருக்கு நேர் நம்மிடம் சொல்வது எதிரிகளுக்கு மட்டுமே சாத்தியம். நம்முடைய நண்பர்கள் சில விடயங்களைச் சொன்னால் நாம் வருத்தப்படுவோம் என்று நினைத்து, அவற்றை நம்மிடம் சொல்லாமலே விட்டுவிடுவார்கள்.

நாம் ஒரு செயலைச் செய்ய நினைக்கும்போது, அதற்குப் பல தடைகளை எதிரிகள் உருவாக்குவார்கள். இதனால் நாம் நினைத்ததை சரியாகச் செய்ய முடியாது. எதிரி நம் கண்ணுக்கு தெரிந்தவராக இருந்தால், நம்மால் எதிர்த்து போராட முடியும். நம் கண்ணுக்கே தெரியாத எதிரிகளை நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால், மனிதர்களை இனம் கண்டு நாம் பழக வேண்டும்.

ஒரு செயலைத் தொடங்கும்போது நமக்கு அதைப் பற்றிய முழுமையான புரிதல் இருப்பதில்லை. ஆனால், எதிரிகள்தான் அவற்றில் முழு அறிவும் தகுதியும் பெற நம்மை ஊக்குவிக்கிறார்கள். நாம் அத்தகைய எதிர்ப்புகளுக்கு நம்மை ஈடுகொடுத்துக் கொண்டு முன்னேற வேண்டும்.

நாம் அச்செயலில் ஈடுபட ஈடுபட, எதிர்ப்பும் வலுவாகிக்கொண்டே வரும். எதிர்ப்புகள் வலுவாக வலுவாக, நம் மனவலிமையும் மிகுவதை நாம் உணரமுடியும். நாளடைவில் நாம் அத்துறையில் தேர்ந்த அறிவுடையவராக மாறவும் முடியும்.

எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சும்போது தொடங்கிய செயலை ஈடுபாட்டுடன் நம்மால் செய்ய முடியாது. எனவே, எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் மனவலிமை நமக்கு மிகவும் தேவை. அப்போதுதான், நாம் மேற்கொண்ட செயலை நம்மால் தொடர்ந்து செய்ய முடியும். எதிர்ப்பு தோன்றும்போதுதான், நம் செயலில் உள்ள நெளிவுசுளிவுகளை நாம் தெரிந்துகொண்டு வெற்றி பெறுவோம்..

நம்மைவிட நம் எதிரி புத்திசாலியாக இருக்கலாம். அதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். நம்மைப் பற்றிய உண்மையான விமர்சனங்களை எதிரிகளால் மட்டுமே தரமுடியும். எதிரிகளின் கருத்துகளை வெளிப்படையாக நம் மனம் அங்கீகரிக்காது. என்றாலும், அவர்களுடைய கருத்துகளை நாம் பரிசீலிக்க வேண்டும்.

எதிர்ப்புகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எதிரிகளின் அறிவு வலிமை, செயல் வலிமை, பின்புலம் முதலியவற்றை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். நம் வலிமைகளை அவற்றுக்கும் மேலாக வளர்த்துக் கொண்டு, அவர்களின் எதிர்ப்புகளை முறியடிக்க வேண்டும்.

மேலும், நம் செயலுக்கு ஏற்படும் எதிர்ப்பை நாம் நமக்கு கிடைக்கும் விளம்பரமாக மாற்றிக்கொள்ள வேண்டும். நமக்கு ஒரு சிலர் எதிரிகள் என்றால் நாம் வளர்கின்றோம் என்றும், அதிகமானவர்கள் எதிரி என்றால் நாம் வளர்ந்துவிட்டோம் என்றும் கருதலாம்.

நமது உடலில் காய்ச்சல் வரும்போது, நமது இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடுகின்றன. அதன் விளைவாக விரைவில் நாம் குணமாகி விடுகின்றோம். இயற்கையாகவே நம் உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியே நம்மை நோயிலிருந்து குணப்படுத்துகிறது. எனவே, நம் வாழ்வில் எதிர்ப்புகள் இயல்பானவை. அவற்றை எதிர்த்து பயணிக்கும் திறமை நமது உடலுக்கும், மனதுக்கும் தேவை.

ஒவ்வொரு வினைக்கும் அதே ஆற்றலுடைய எதிர்வினை உண்டு என்கிறது அறிவியல். நமது முயற்சிகளுக்கு எதிர்ப்புகள் வருவதை தவிர்க்க முடியாது.

நம் வினையும், அதற்கான எதிர்வினையும் சேர்ந்துதான் நமது செயற்பாடுகளைத் தீர்மானிக்கின்றன.

மின்சாரத்தில் நேர் மின்னாற்றலும் எதிர் மின்னாற்றலும் சேர்ந்தால்தான் மின்னாற்றல் கிடைக்கிறது. அது போலவே, நாம் நமது செயல்களில் வெற்றி பெறுவதற்கு எதிரிகள் தேவை. விளையாட்டுப் போட்டிகளில் கூட எதிரணி இருந்தால்தான், நம் திறமைகளை மேலும் வெளிக்கொண்டுவர நாம் முயல்வோம்.

அதுபோலதான் நமது அன்றாட வாழ்விலும். நம்மை நாமே செழுமைப்படுத்திக் கொண்டு, செதுக்கிக் கொள்ள எதிரிகள் தேவை என்பதை இனியாவது நாம் உணர்ந்து கொள்வோம். எதிரிகளை வென்று வாழ்வில் முன்னேறுவோம்.



අමාත්‍ය මණ්ඩල තීරණ
அமைச்சரவை முடிவுகள்
CABINET DECISIONS
රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
அரசாங்க தகவல் திணைக்களம்
Department of Government Information

# 2023.07.10 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்குமிடையிலான கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித் துறையில் ஒத்துழைப்புக்கான ஒருங்கிணைந்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்தில் (Expressions of Interest) கையொப்பமிடல்**

இலங்கையில் பால் உற்பத்திகளின் தரப்பண்பை அதிகரித்தல், பால் உற்பத்தியில் தன்னிறைவடைதல் மற்றும் சிறியளவிலான பால் உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரித்தல் போன்ற இலக்குகளை அடைவதற்கு இணைந்து செயலாற்றுவதற்காக இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்குமிடையில் கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித் துறையில் ஒத்துழைப்புக்கான ஒருங்கிணைந்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்காக வரைவாக்கம் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த அக்கறை வெளிப்பாட்டு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக ஜனாதிபதியும் விவசாய அமைச்சரும் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இந்தோனேஷியாவுடன் மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ள முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை (Preferential Trade Agreement)**

கிழக்காசியாவில் பாரிய பொருளாதாரத்தைக் கொண்டுள்ள இந்தோனேஷியா, இலங்கைக்கு நன்மையளிக்கும் வகையில் வர்த்தகத் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான ஆற்றல்வளத்துடன் கூடிய வர்த்தகப் பங்காளராக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, நீண்டகாலத்திற்கு அந்நாட்டுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை (FTA) மேற்கொள்ளும் நோக்கில், அதன் ஆரம்பப் படிமுறையாக முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையை (PTA) மேற்கொள்வதற்கான கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. தேசிய நீர்வளம் பற்றிய கொள்கை மற்றும் அமுலாக்கல் முகாமைத்துவப் பொறிமுறை**

கடந்த பத்து ஆண்டுகளாக நிலவுகின்ற கடுமையான காலநிலை மாற்றங்களால், உலகில் அதிகளவில் பாதிப்புற்ற நாடுகளில் இலங்கையும் காணப்படுகின்றது. இந்நிலைமையால் படிப்படியாக நாட்டின் உலர்வலயப் பிரதேசங்களுக்குக் கிடைக்கின்ற பருவகால மழைவீழ்ச்சி குறைவடைந்தமையாலும், ஈரவலயத்தில் கிடைக்கின்ற மழைவீழ்ச்சி அதிகரித்துள்ளமையாலும் எதிர்பாராத வகையில் மோசமான வறட்சிக்கும், வெள்ள அனர்த்தங்களுக்கும் முகங்கொடுக்க நேரிட்டுள்ளது. கட்டுப்படுத்த முடியாத வகையில் தோன்றியுள்ள அவ்வாறான காலநிலை மாற்றங்களால் குடிநீர், நீர்ப்பாசனம், எரிசக்தி தேவைகளுக்காக எமது நாட்டில் காணப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட நீர்வளத்தை உயரிய வகையில் முகாமைத்துவப்படுத்துதல் மிகவும் சிக்கலான செயன்முறையாக மாறிவருகின்றது. அதனால், மிகவும் பயனுள்ள நீர்வளக் கொள்கையை அறிமுகப்படுத்தல் முன்னுரிமைப்படுத்தப்பட்ட தேசிய தேவையாக அமைந்துள்ளது. அதற்கமைய, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான பேராசிரியர். சீ.எம்.மத்தும பண்டாரவின் தலைமையில், இத்துறைசார் பிரதிநிதிகளுடன் கூடிய விசேட நிபுணத்துவக் குழுவால், பிரதமர் அலுவலகத்தின் ஒருங்கிணைப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய நீர்வளக் கொள்கை மற்றும் அமுலாக்கல் முகாமைத்துவப் பொறிமுறையை ஜனாதிபதி அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**04. ஸ்ரீ ஜினரத்ன கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாக சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள கொழும்பு 02, ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள காணியை நன்கொடையாக வழங்கல்**

பேரெ வாவி (Beira Lake) புனரமைப்புக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது ஸ்ரீ ஜினரத்ன கற்கைகள் நிறுவனத்தால் பயன்படுத்தப்பட்ட காணிக்குப் பதிலாக கொழும்பு 02, ஸ்ரீமத் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தையில் அமைந்துள்ள 45 பேர்ச்சர்ஸ் காணித்துண்டை வருடாந்த குத்தகை அடிப்படையில் 99 வருடகாலக் குத்தகைக்கு அதன் கல்வி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது. மிகவும் வினைத்திறனான கல்விச் சேவைகளை வழங்கல் மற்றும் குறித்த நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அதிகமான வசதிகளை வழங்குவதற்கு இயலுமை கிட்டும் வகையில் குறித்த காணியை அபிவிருத்தி செய்வதற்காக நீண்டகாலக் குத்தகைக்குப் பதிலாக குறித்த காணித்துண்டை நன்கொடையாக வழங்குமாறு ஸ்ரீஜினரத்ன கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாக சபையின் பரிபாலகரான தேரர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். குறித்த வேண்டுகோள் 2023.04.06 அன்று நகர அபிவிருத்தி அதிகாரசபை முகாமைத்துவ சபையால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த காணித்துண்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையால் ஸ்ரீ ஜினரத்ன கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாக சபைக்கு நன்கொடையாக வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**05. இற்றைப்படுத்தப்பட்ட தேசிய பௌதீகத் திட்டக் கொள்கை மற்றும் திட்டம் - 2048**

இலங்கையின் தேசிய பௌதீகத் திட்டத்தை இற்றைப்படுத்துவதற்காக 2020.01.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஜனாதிபதி சமர்ப்பிக்கப்பட்ட அக்கிராசன உரை(Beira Lake) மற்றும் வரவு - செலவுத்திட்ட உரை மூலம் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள், அரச கொள்கைக் கூற்று மற்றும் பல்வேறு நிறுவனங்கள் மூலம் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் பற்றிய அரசுகளுக்கிடையிலான குழு அறிக்கை – 2021 இனை அடிப்படையாகக் கொண்டு 2000 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க நகரம் மற்றும் கிராமத் திட்டமிடல் (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் ஆலோசனைகள் மற்றும் ஏற்புடைய அனைத்துத் தரப்பினர்களின் பங்களிப்புடன் "தேசிய பௌதீகத் திட்டக் கொள்கை மற்றும் திட்டம் - 2048" தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த திட்டத்திற்காக தேசிய பௌதீகத்திட்டமிடல் குழுவின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கமைய, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த இற்றைப்படுத்தப்பட்ட தேசிய பௌதீகத் திட்டக் கொள்கை மற்றும் திட்டம் - 2048 இனை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை உடன்பாடு வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

**06. செய்மதித் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு எண்ணெய்க் கசிவை அவதானிக்கும் சேவைகளை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

கப்பல் தொழிற்றுறை விருத்தி மற்றும் துறைமுகங்கள் அபிவிருத்தியின் காரணமாக இலங்கையின் நீர்ப்பரப்பில் பயணிக்கின்ற கப்பல்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால், கப்பல்களிலிருந்தான எண்ணெய்க் கசிவுகள் பற்றிய தகவல்களை துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையை நிறுவ வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறான பொறிமுறையொன்றைப் பேணுவதால் கப்பல்களால் விளைவிக்கப்படுகின்ற கடல் மாசடைதல்களைத் தடுப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கப்பலை அடையாளங் காண்பதற்காகவும் குறித்த கப்பலுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் இயலுமை கிடைக்கும். அதற்கமைவான முன்னோடிக் கருத்திட்டமாக பிரான்ஸ் நாட்டின் பொருளாதார மற்றும் நிதி அமைச்சால் 601,810 யூரோக்கள் அனுசரணை Collected Localization Satellites (CLS) நிறுவனத்தின் மூலம் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்த வரைபுக்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கான நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. மாலபே தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் அமைந்துள்ள காணித் துண்டொன்று இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்காக வழங்கல்**

இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்காக மாலபே தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் அமைந்துள்ள 03 ஏக்கர் காணித்துண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. குறித்த காணித்துண்டை எடுத்தலுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை செலவிட்டுள்ள தொகையை இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் தற்போது செலுத்தியுள்ளது. அதற்கமைய, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனையைக் கருத்திற்கொண்டு குறித்த காணித்துண்டை இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்திற்கு அறுதியும் உறுதியுமாக வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தை (சதொச) மீள்கட்டமைத்தல்**

கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தை (சதொச) தாபிக்கப்பட்டதன் நோக்கம் அடையப் பெறாமை, இந்நிறுவனத்தால் பொருளாதாரத்திற்கு பயனுள்ள வகையில் பங்களிப்புகள் கிடைக்காமை போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு சதொச நிறுவனத்தை மீள்கட்டமைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, கூட்டுறவு மொத்த வர்த்தகக் கூட்டுத்தாபனத்தை (சதொச) மீள்கட்டமைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்புக் குழுவொன்றை நியமித்து உத்தேச மீள்கட்டமைப்புச் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக வணிக, வர்த்தக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு வானூர்திச் செலவியல் சேவை (வான் செலுத்துகை மற்றும் வான்செலவுப் பாதுகாப்பு) வழங்குநர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல்**

சர்வதேச குடியியல் வான்செலவினது சமவாயத்தின் நோக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தரநியமங்கள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்கி இலங்கையின் சமுத்திரம் சார் வான்வெளியினுள்ளும் வான் நடமாட்டச் சேவைகள் பாதிக்கப்படாத வகையில் வான் பயணங்களை உறுதிப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் வான் செலுத்துகை மற்றும் வான் செலவுப் பாதுகாப்பு வழங்கல்களை ஒழுங்குபடுத்தலுக்காக 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க குடியியல் வான்செலவுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு வானூர்திச் செலவியல் சேவை (வான் செலுத்துகை மற்றும் வான்செலவுப் பாதுகாப்பு) வழங்குநர்களுக்கு உரிமமளிப்பதற்கான ஒழுங்குவிதிகள், 2326/16 ஆம் இலக்க 2023.04.13 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்தல்**

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2023.01.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்காக சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை**

சிறு உரிமைகோரல் நீதிமன்றத்திற்கு தனித்துவமான ஆரம்ப குடியியல் நீதிமன்ற அதிகாரங் கொண்ட ஏழாவது அட்டவணையில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வழக்குகளின் பணத்தொகைப் பெறுமதி நீதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சரால் விதிக்கப்பட வேண்டுமென்ற ஏற்பாடு 1978 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க நீதித்துறைச் சட்டத்தின் 29அ பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வட்டி தவிர்ந்த 1.5 மில்லியன் ரூபாய்கள் வரைக்குமான பணப்பெறுமதி, வட்டி தவிர்ந்த இரண்டு மில்லியன் ரூபாக்கள் அல்லது அதற்கு மேற்படாத தொகை எனும் கட்டளையை நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சரால் 2328/16 ஆம் இலக்க 2023.04.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த கட்டளையைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 2023 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கடனெடுத்தல் எல்லையைத் திருத்தம் செய்வதற்கான சட்டமூலம்**

2023 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட கடனெடுத்தல் எல்லையைத் திருத்தம் செய்வதற்காக 2023.06.28 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2022 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞரால் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. ஆண்டின் நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கை**

2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 10 ஆவது பிரிவுக்கமைய நடு ஆண்டு நிதி நிலைப்பாடு பற்றிய அறிக்கையை நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் ஒவ்வோர் நிதியாண்டு தொடர்பிலும் இயைபான ஆண்டின் ஜூன் மாதத்தின் கடைசித் தினம் பொதுமக்களுக்கு விடுவித்தல் செய்யப்படல் வேண்டியதுடன், பின்னர், குறித்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அதற்கமைய, 2023.06.30 வரைக்குமான நடு ஆண்டு நிதி நிலைப்பாட்டு அறிக்கை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் 07 ஆவது அணியை இணைத்துக் கொள்ளல்**

அரசுசாரா பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்காக வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தின் கீழ் 07 ஆவது குழுவை இணைத்துக் கொள்வதற்காக 2023.04.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி முழுமையான கடன் காலப்பகுதிக்கான 13% குறைந்த வட்டி வீதத்தைப் பேணி இக்கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் உயர்தரம் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களில் பொருத்தமான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்களை 07 ஆவது அணியின் கீழ் வட்டியில்லாத மாணவர் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. அம்பாந்தோட்டை மாவட்ட அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தை (Master Plan) தயாரித்தல்**

பிரதான விருத்தி மையத்திற்கான பாரிய அம்பாந்தோட்டை பிரதேச மாதிரித்திட்டம் மற்றும் விபரங்களுடன் கூடிய பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்காக ஆலோசனை சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான பணிகள் சர்பானா யுரோங்க் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்கு 2018.06.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும், அத்தீர்மானத்திற்கமைய இதுவரை நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. அம்பாந்தோட்டை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்காக முன்னுரிமை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், கொழும்பு நகரம் மற்றும் மேல்மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ள சர்பானா யுரோங்க் (தனியார்) கம்பனிக்கு அம்பாந்தோட்டை பிரதேச மாதிரித்திட்டம் மற்றும் விபரங்களுடன் கூடிய பிரதான திட்டத்தைத் தயாரிப்பதற்கான பணிகளை வழங்குவது மிகவும் பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த பணிகளை சர்பானா யுரோங்க் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. முதியோர் உதவிகள் பெறுகின்றவர்கள், நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான உதவிகள் பெறுகின்றவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள் பெறுகின்றவர்களுக்கான நலன்புரி நன்மைகளை வழங்கல்**

ஆறுதல் (அஸ்வெசும) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு உத்தேசத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அடையாளங் காணப்பட்டுள்ள இரண்டு மில்லியன் பேரின் பெயர்பட்டியலுக்கு தற்போது மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிப்பதற்காக பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளன. குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ள முதியோர் உதவிகள் பெறுகின்றவர்கள், நாட்பட்ட சிறுநீரக நோயாளர்களுக்கான உதவிகள் பெறுகின்றவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள் பெறுகின்றவர்களுக்கு மிகவும் பொருத்தமான குறிகாட்டிகள் மற்றும் வழிகாட்டிகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கும் வரைக்கும், இதுவரைக்கும் நன்மைகளைப் பெற்றுவந்த குறித்த 03 சமூகக் குழுக்களுக்கும் தற்போது வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நலன்புரி நன்மைக் கொடுப்பனவுகளை செலுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**17. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கென்வில் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனி, ஹொட்டேல் டெவலொப்பேர்ஸ் லங்கா நிறுவனம் மற்றும் லிட்ரோ லங்கா எரிவாயுக் கம்பனிகளுக்கான கொடுக்கல் வாங்கல் ஆலோசகர்களைத் தெரிவு செய்தல்**

2023.03.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி கம்பனிகளை மீள்கட்டமைப்பு செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, குறித்த பணிகளுக்கான கொடுக்கல் வாங்கல் ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்காக சர்வதேச போட்டித்தன்மையான பெறுகைக் கோரல் முறைமையைப் பின்பற்றி, அக்கறை வெளிப்பாட்டுக் கூற்று (EOI) மற்றும் முன்மொழிவுக்கான விண்ணப்பங்கள் (RfP) கோரப்பட்டுள்ளன.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவால் குறுகிய பட்டியல்படுத்தப்பட்ட முன்மொழிவுகளில் தரப்பண்பு மற்றும் செலவுகளின் அடிப்படையிலான தெரிவு செய்யும் பொறிமுறையைக் கடைப்பிடித்து, மேற்குறிப்பிட்ட 04 நிறுவனங்களுக்கான கொடுக்கல் வாங்கல் ஆலோசகர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அதற்கமைய, தெரிவுசெய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் ஆலோசகர்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

I. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் - Alvarez and Marsal
II. கென்வில் ஹோல்டிங்க்ஸ் (தனியார்) கம்பனி – Deloitte India
III. ஹொட்டேல் டெவலொப்பேர்ஸ் லங்கா நிறுவனம் - Colliers Singapore
IV. லிட்ரோ லங்கா எரிவாயுக் கம்பனி - Deloitte India

## கட்டுக்குள் வருமா ... (04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கொள்கையின் விளைவாகக் கட்டாயக் கருக்கலைப்பு, சிசுக்கொலை போன்ற நடவடிக்கைகள் நடந்தன என்ற குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். இன்று வாடிய பயிரைக் காணும் போதெல்லாம் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர். தண்ணீர் பற்றாக்குறைக்கு மக்கள் பெருக்கமும் ஒரு காரணம் எனலாம். மக்கள் வாழ்வாதாரத்துக்காகவும் வாழ்விடங்களுக்காகவும் காடுகளும் அழிக்கப்படுகின்றன. மக்கள் தொகை அதிகரிப்பதனால் காடுகள் சுருங்கி, தண்ணீர் ஆதாரம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

மக்கள்தொகைப் பெருக்கம் குறித்தான கருத்துகளை முதலில் விதைத்தவர் தோமஸ் மால்தஸ்தான். ஆனால், அப்போது அவர் எண்ணியதுபோல் மக்கள்தொகைப் பெருக்கம் பெரும் நெருக்கடியை உருவாக்கவில்லை. 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் மக்கள் தொகை விரைவாகப் பெருகியது. எனினும், அதற்கேற்ப உணவும், பிற பொருட்களின் உற்பத்தியும் பெருகியதால் வல்லுநர்களின் கணக்கு தவறு என்பது தெளிவானது.

இடதுசாரிக் கருத்துடையவர்களின் கொள்கையும் அதுதான். உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் வெறும் வயிற்றோடு மட்டும் பிறக்கவில்லை. இரண்டு கைகளோடும் பிறக்கிறான் என்பதை மறந்துவிடக் கூடாது. மக்கள்தொகைப் பெருக்கத்தில் உழைப்பாளர்களின் உழைப்பும், உற்பத்தியும் ஒளிந்திருக்கிறது என்பது அவர்களின் கருத்தாகும்.

நவீன மருத்துவ வசதிகளும், தொழில்நுட்ப ஆற்றலும் இன்று பெருமளவில் இறப்பு விகிதத்தைக் குறைத்து மக்கள்தொகைப் பெருக்கத்திற்கு வழி வகுத்திருக்கின்றன. மக்கள் தொகை அதிகரிப்பால் இயற்கை வளங்களின் பயன்பாடும் பொருள் உற்பத்தியும் அதிகரித்திருக்கின்றன. பல குழந்தைகளைப் பெற்ற ஏழைகளைவிட ஒரு குழந்தையைக் கொண்ட செல்வந்தரின் குடும்பமே சூழல் சீர்கேட்டிற்குப் பெரிதும் காரணமாய் இருக்கிறது.

பண்டைக் காலத்தில் இருந்தே மக்கள்தொகை பற்றி அறிஞர்களிடையே கவலை இருந்ததாகத் தெரிகிறது. தத்துவஞானி பிளேட்டோ இதுபற்றிச் சில வலுவான கருத்துகளைக் கொண்டிருந்தார். 'தி ரிபப்ளிக்' என்னும் அவர் படைப்பில் மக்கள்தொகை பற்றியும், நுகர்வு கலாசாரம் பற்றியும் விரிவாக விளக்கியுள்ளார்.

அதிகரிக்கும் மக்கள்தொகை பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் முயற்சியாக ஆண்டுதோறும் ஜூலை 11 அன்று உலக மக்கள்தொகை நாள் கொண்டாடப்படுகிறது. என்றாலும் அதன் ஓட்டத்தைத் தடுத்து நிறுத்துவது பொதுமக்கள் கைகளில்தான் உள்ளது.


### மோட்டார்சைக்கிள் சந்தை – அநுராதபுரம்

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| NC BES-79xx | HONDA | DIO |
| NC BHN-56xx | HONDA | DIO |
| NC BGE-36xx | HONDA | DIO SCV 110 |
| NC BBE-03xx | HONDA | DIO SCV 110 |
| NC BGN-52xx | HONDA | DIO SCV 110 |
| NC BDQ-18xx | HONDA | DIO SCV 110 |
| NW BGJ-77xx | HONDA | DIO SCV 110 |
| NW BAO-61xx | HONDA | DIO SCV 110 |
| NW BHH-40xx | HONDA | DIO SCV 110 |
| NW BHJ-42xx | HONDA | DIO SCV 110 |
| NW BIK-14xx | HONDA | DIO SCV 110 |
| NW BGV-50xx | HONDA | DIO SCV 110 |
| NW BGH-36xx | HONDA | DIO SCV 110 |
| NW BHX-84xx | HONDA | DIO SCV 110 |
| NW BIF-84xx | HONDA | DIO SCV 110 |
| NW BDB-94xx | HONDA | DIO SCV 110 |
| NC BEZ-21xx | HONDA | DIO SCV 110 |
| NC BCI-60xx | HONDA | DIO SCV 110 |
| WP- BDT-49xx | HONDA | DIO SCV 110 |
| WP BEW-24xx | HONDA | DIO SCV 110 |
| WP BIG-15xx | HONDA | DIO SCV 110 |
| NW BHR-31xx | HONDA | DIO SCV 110 |
| NW BFZ-80xx | HONDA | DIO SCV 110 |
| NC BEC-92xx | HONDA | DIO SCV 110 |
| NC BFA-77xx | HONDA | DIO SCV 110 |
| NC BIB-01xx | BAJAJ | PLATINA |
| NW BHV-84xx | BAJAJ | PULSAR 150 |
| NC BFE-30xx | BAJAJ | PLATINA |
| NC BAM-72xx | BAJAJ | CT 100 |
| NC BFJ-25xx | BAJAJ | PLATINA |
| NC BEW-45xx | BAJAJ | PULSAR 135 LS |
| NC BEG-42xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| NC BHG-94xx | TVS | NTORQ |
| NC BEA-60xx | TVS | WEGO |
| NC BFK-54xx | TVS | WEGO |
| NW BFW-13xx | TVS | XL SUPER HD |
| NW BHX-51xx | TVS | NTORQ |
| NC BHI-50xx | TVS | NTORQ |
| NC BHK-04xx | TVS | METRO |
| NC BIP-34xx | YAMAHA | RAY-ZR |
| NW BGN-88xx | YAMAHA | RAY-ZR |
| NWBIR-83xx | YAMAHA | RAY ZR |
| NW BIW-54xx | YAMAHA | RAY ZR |
| NW BGH-91xx | YAMAHA | RAY ZR |
| NC BGZ-66xx | YAMAHA | RAY ZR |
| NW BIK-86xx | YAMAHA | RAY ZR |
| NC BCA-58xx | YAMAHA | FZ |
| NW BEW-74xx | HERO | PLEASURE |

இடம்: யாழ்ப்பாண சந்தி, அநுராதபுரம்
(புனைட்டட் மோட்டாஸுக்கு முன்னால்)
மோட்டார் சைக்கிள் விற்பனை திகதி:–14.07.2023 காலை 10.30 மணி முதல்
பார்வையிடும் திகதி :–14.07.2023 காலை (8.30 மணி முதல் 10.30 மணி வரை)
தரிந்து:– 0773147609 விஸ்வா:–0774787096
துரித அழைப்பு:–0117308080 வட்ஸ்அப்:–0710356125
வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.
AMF அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
திங்கட்கிழமை 2023.07.10
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5171
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 0 8 0 8 4 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3413
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 68,821,457.20
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 04 06 10 65

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1201
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,120,232.80
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 04 17 64 65
விசேட எழுத்து L

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 480
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,006,049.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 23 25 41 62
விசேட இலக்கினம் மீனம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1519
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 400,531,580.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 07 11 34 68

# ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வைச் சுட்டிக்காட்டி தமிழ்த் தேசிய முன்னணி இந்தியப் பிரதமருக்கு கடிதம்

## செல்வராசா கஜேந்திரன் எம்.பி. யாழ். இந்திய தூதரகத்தில் கையளிப்பு

யாழ். நிருபர்

ஈழத் தமிழர்களுக்கான அரசியல் தீர்வு உள்ளிட்ட விடயங்களை சுட்டிக்காட்டி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்தியப் பிரதமருக்கான இக்கடிதத்தை யாழிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தில் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கையளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார்.

இந்நிலையில், ஈழத் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அரசியல் தீர்வுகளைச் சுட்டிக்காட்டி இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகள் பல இணைந்து ஒருமித்து கடிதம் அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றன.

இவ்வாறானதொரு சூழலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனியாக பிரதமருக்கு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காலைவேளையில் கழிவகற்றலை தவிருங்கள்: நகரசபையிடம் சந்தை வியாபாரிகள் கோரிக்கை!

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி பொதுச்சந்தை சுற்று வட்டாரத்தில் உள்ள மலசலகூட கழிவுகள் மற்றும் உணவக கழிவுநீர் தொட்டிக் கழிவுகளை காலைவேளைகளில் அகற்றுவதை சாவகச்சேரி நகரசபையினர் தவிர்க்கவேண்டுமென சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக சந்தை வியாபாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

பொதுச்சந்தை வளாகத்திற்குள் உள்ள மலசலகூட கழிவு மற்றும் உணவகம் ஒன்றின் கழிவுநீர் ஆகியவற்றை சாவகச்சேரி நகரசபையினர் காலைவேளையில் அகற்றி வருகின்றனர்.

இதனால் சந்தை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

மேலும் கழிவகற்றும் பவுசர் ஊடாக வடிகின்ற கழிவுநீர் சந்தையின் தேங்காய் வியாபாரம், பழ வியாபாரம் நடைபெறுகின்ற இடங்களில் சிந்தும் நிலையும் காணப்படுகின்றது.

இதனால் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் எதிர்நோக்குகின்ற சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் விதமாக காலைவேளை தவிர்த்து மலசலகூட கழிவகற்றல் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென மேலும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# புதிய சட்ட திருத்தம் தொடர்பில் மீனவ சங்கங்களைச் சந்திக்கத் தயார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வட்டுக்கோட்டை நிருபர்

திருத்தப்படவுள்ள புதிய மீன்பிடிச் சட்டங்கள் தொடர்பில் மீனவ சங்கங்கள் கலந்துரையாட விரும்பினால் அமைச்சில் அதற்குரிய ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்படும் - என கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (10) திங்கட்கிழமை யாழ் பாடி விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் எழுப்பிய கேள்வியொன்று தொடர்பில் அமைச்சரிடம் தொடர்புகொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் புதிய மீன்பிடிச் சட்டத்தால் வடக்கு மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்படுமா எனக் கேள்வி எழுப்பியதுடன் புதிய சட்டங்கள் தொடர்பில் சாதக - பாதக தன்மைகள் தொடர்பில் முற்கூட்டியே அமைச்சருடன் கலந்துரையாட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.



இந்நிலையில், அமைச்சரிடம் தொடர்புகொண்டு கேட்டபோது இலங்கையிலுள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களிலும் புதிய மீன்பிடிச் சட்டம் தொடர்பில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

அதன்போது புதிய சட்டத்தில் மீனவர்களின் எதிர்பார்ப்புகள் தொடர்பில் வருகைதரும் அதிகாரிகளுடன் தெளிவாகக் கலந்துரையாடலாம். இல்லாவிட்டால் அமைச்சில் கலந்துரையாட விரும்பினால் அதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமாகாண சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பில்.....












பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தமிழ் நீதிபதிகள் தொடர்பாக தெரிவித்த கருத்தைக் கண்டித்து வடமாகாணத்தில் சட்டத்தரணிகள் நேற்று பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.

யாழ்., சாவகச்சேரி, மன்னார் நீதிமன்ற சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாது நேற்று பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அத்தோடு முல்லைத்தீவில் இடம்பெறும் போராட்டத்திலும் கலந்துகொள்ள முல்லைத்தீவுக்குச் சென்றனர்.

இதன் காரணமாக நேற்றைய வழக்கு விசாரணைகள் தவணையிடப்பட்டன.

# அரச பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பணம் பெற்று மேலதிக வகுப்பு நடத்த முடியாது!

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் உத்தரவு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அரச பாடசாலை ஆசிரியர்கள் தாம் வகுப்பறையில் கற்பிக்கும் பாடங்களை அதே பாடசாலை மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகளில் கற்பிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இரத்தினபுரி இணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.



அரச சுற்று நிருபத்துக்கிணங்க சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் ஏற்கனவே இச்சுற்றுநிருபத்தை வெளியிட்டுள்ள போதிலும், இச்சுற்றுநிருபத்தை மீறி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

எனவே, இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் இச்சுற்றுநிருபத்தை மதித்து செயற்படல் வேண்டும். பாடசாலைகளில் கற்பிக்கும் பாடங்களை அதே ஆசிரியர், பணத்தைப் பெற்றுக்கொண்டு தனியார் மேலதிக வகுப்பை நடத்த முடியாது.

எனவே, இவ்விடயத்தில் இம்மாகாண அரச பாடசாலை ஆசிரியர்கள் பொறுப்புடன் செயலாற்ற வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்தார்.

# அரசியல் பேதங்கள் சீர்தூக்காத வகையில் இத்தருணத்தில் நடவடிக்கை எடுத்தல் நலம்

## உதயகுமார் எம்.பி. தெரிவிப்பு

ஆ.ரமேஸ்

இராகலை இலக்கம் (01) தோட்டத்தில் தீயினால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் வாழ்வுக்குச் சென்றுள்ள மக்களுக்கு தனி வீடுகளை அமைத்து அவர்களை வாழ வைக்க அனைவரும் ஒன்றுசேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் எம்.பி. தெரிவித்தார்.

இராகலை இலக்கம் (01) தோட்டத்தில் கடந்த புதன்கிழமை தீ விபத்துச் சம்பவத்தில் இலககம் (06) லயத்தில் 20 வீடுகள் எரிந்து லயத்தில் வசித்த 18 குடும்பங்களைச் சேர்ந்த 75 பேர் நிர்க்கதிக்குள்ளாகி பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இருப்பிடம், உடைமைகளை தீ யுக்கு இரையாக்கிய நிலையில், தோட்டத்தின் பொது இடத்திலேயே மக்கள் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பார்வையிட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய பாராளுமன்ற உறுப்பினர் நேற்றுமுன்தினம் (10)மாலை நேரடி விஜயத்தை மேற்கொண்டு பார்வையிட்டு கலந்துரையாடி அத்தியாவசிய பொருட்களையும் கையளித்தார்.

இதன்போது உதயகுமார் எம்.பி. கூறுகையில், முதலில் தோட்டங்களில் லயன் வாழ்கையில் இருந்து விடுப்பட்டு தனி குடியிருப்புகளில் வாழும் வகையில் அவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். இந்த நடைமுறையை முன்வைத்து நாம் கடந்த காலங்களில் தனி வீடு அமைக்கும் திட்டத்தில் இறங்கி செயற்பட்ட போதிலும், அதற்கு அரசியல் மாற்றம் தடைக்கல்லாக அமைந்திருந்தது.





இருப்பினும், தனிவீடுகளை அமைத்து அதில் மக்களைக் குடியமர்த்தி வாழவைக்கும் முயற்சிகள் கைவிடப்படவில்லை. எனவே, மலையகத்தில் இனி வரும் காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு வீடமைப்பு உள்ளிட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் செய்வதற்கு அரசியல் தலைமைகள் முன்வர வேண்டும் - என்றார்.

# மாணவத் தலைவர்களுக்கான ஒருநாள் பயிற்சிச் செயலமர்வு





உக்குவளை செய்தியாளர்

முஸ்லிம் பிரிவின் ஏற்பாட்டில் மாணவத் தலைவர்களுக்கான ஒருநாள் பயிற்சிச் செயலமர்வு மாத்தளை விஞ்ஞானக் கல்லூரியில் முஸ்லிம் பாடசாலைகளின் பணிப்பாளர் மேஜர் என். டி .நசுமுதீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாத்தளை சாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்க அனுசரணையில் நடத்தப்பட்ட இச்செயலமர்வில் மாத்தளை, கலேவெல இவத்துகாமம், கட்டுகஸ்தோட்டை முஸ்லிம் பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் மாத்தளை விஞ்ஞானக் கல்லூரிகளின் மாணவர்களும் பங்குபற்றினர்.

இச்செயலமர்வின் வளவாளர்களாகப் பேராதனைப் பல்கலைக்கழக இஸ்லாமிய அரபு மற்றும் இஸ்லாமிய கற்கை சிரேஷ்ட விரிவுரையாளர் இசட்.எம்.நபீல், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.உனைஸ், மாகாவலி தேசிய கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மேஜர் எஸ்.பி . விதான பதிரன, விஞ்ஞானக் கல்லூரி அதிபர் திருமதி ஏ.சீ. ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உயிரிழந்த தாய் அடையாளம்

ஆ.ரமேஸ்

தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து சடலமாக மீட்கப்பட்ட வயோதிப பெண் திம்புல-பத்தனை தோட்டத்தில் வசிக்கும் பெருமாள் பெரமாய் (வயது 67) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த இந்தப் பெண் 2015 ஆம் ஆண்டு முதல் தனக்கு ஏற்பட்ட நோய்க்கு தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வந்துள்ளமை விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. இவர் திருமணம் முடித்துள்ள நிலையில் பிள்ளைகள் இல்லை. கணவரும் இறந்த நிலையில், தனது தங்கையுடனும் தங்கையின் மகனின் அரவணைப்பிலும் வசித்து வந்துள்ளார். இவர் 09 ஆம் திகதி வீட்டைவிட்டுச் சென்று திங்கட்கிழமை காலை 10.30 மணியளவில் தலவாக்கலை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் அடையாளம் காணப்படாத நிலையில் நீதவானின் உத்தரவுக்கமைய நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தலவாக்கலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், சம்பவம் அறிந்த உறவினர் அவரின் சடலத்தை அடையாளம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கண்டி வைத்தியசாலை சிறுநீரகப் பிரிவில் இரண்டு மாதங்களில் ஏழுபேர் மரணம்!

## உபகரணக் குறைபாடா எனச் சந்தேகம்

கண்டி நிருபர்

கண்டி தேசிய வைத்தியசாலையில் சிறுநீரக சிகிச்சைப் பிரிவில் கடந்த இரண்டு மாத காலத்தில் 7 பேர் மரணித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக சிகிச்சையளிக்கும் உபகரணங்களில் ஏதும் குறைபாடு காணப்படுகிறதா என்ற சந்தேகம் வைத்தியர்களுக்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

93 சதவீத்திற்கு மேல் சிறுநீரகம் இயங்காதவர்களுக்கு வைத்தியசாலையில் வைத்தே டயாலிசிஸ் எனும் சிகிச்சை செய்யப்படுகிறது. அதனை விடக் குறைவான அளவு செயலிழந்துள்ளவர்களுக்கு தமது வீடுகளில் வைத்தே இச்சிகிச்சை செய்ய உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அப்படி வீடுகளிலிருந்து டயாலிசிஸ் செய்தவர்களை விட வைத்தியசாலையில் டயாலிசிஸ் செய்தவர்கள் மரணிக்க காரணமாக ஏதும் புறக்காரணிகள் உள்ளனவா என்ற சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டுள்ளது.

# எருமை மந்தை விரட்டியதால் ஐந்து மாணவர்கள் காயம்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பாடசாலை சென்றுகொண்டிருந்த மாணவர்கள் சிலரை எருமை மந்தை விரட்டிச் சென்றதால் காயமடைந்த ஐந்து மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை (11) பத்கொடை சந்தியிலிருந்து ப/விவேகானந்தா தமிழ் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்த மாணவர்களே இந்நிலைமைக்கு முகங்கொடுத்துள்ளனர். பாதிப்புக்குள்ளான மாணவர்கள் அனைவரும் 10/11 வயதுகளை உடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. எருமை மந்தை மேய்ப்பாளர் ஒருவரால் இந்த எருமை மாடுகள் வீதியில் கொண்டு செல்லப்பட்டதாகவும் இடையில் குழம்பிய எருமை மாடுக ள் மாணவர்களை விரட்டியதாகவும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், மாணவர்கள் எவருக்கும் ஆபத்தான நிலைமை இல்லையென வைத்தியர்கள் தெரிவித்தனர்.

# தெங்கு அபிவிருத்தி, பயிர்ச்செய்கை, ஆராய்ச்சி நிறுவனங்களின் முறைகேடுகள் அம்பலம்





தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தென்னைப் பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் முறைகேடுகள் என்பன தொடர்பில் கோப் குழுவில் அம்பலமாகியுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் கடந்த 06ஆம் திகதி கூடிய அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை, தென்னை பயிர்ச்செய்கை சபை மற்றும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன அழைக்கப்பட்டிருந்தன.

இதன்போது 2021.01.21ஆம் திகதி நடைபெற்ற கோப் குழுவில் இந்த நிறுவனங்கள் தொடர்பில் வழங்கிய அறிவுறுத்தல்களில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்பட்டன. இதன்போதே நிர்வாகப் பிரச்சினைகள் மற்றும் பல முறைகேடுகள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

### நோய்களைக் கட்டுப்படுத்த பொது வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்

அவசர நிலைமையாகக் கருதி விசேட குழுவொன்றை அமைத்து தெங்கு பயிர்ச்செய்கையின் போது பரவும் வெள்ளை-ஈ நோய்களைக் கட்டுப்படுத்தவும் தெங்கில் பரவும் நோய்களைத் தடுப்பதற்கும் மூன்று நிறுவனங்கள் இணைந்து கலந்துரையாடி பொதுவான வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆராயப்பட்டது. இதுவரை அமைக்கப்பட்ட தேசிய அனர்த்த முகாமைத்துவ செயற்பாட்டுப் பிரிவுடன் தென்னை அபிவிருத்தி அதிகாரசபை இணைந்து செயற்படாத காரணத்தால் இந்த நடவடிக்கைக்கு அந்நிறுவனத்தையும் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

தென்னந்தோப்புக்கு உரிய நேரத்தில் உரமிடாததால் இதுபோன்ற நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு சொந்தமான காணிகளில் கடந்த 2016ஆம் ஆண்டே உரம் இடப்பட்டதும் இங்கு தெரியவந்தது.

இந்த மூன்று நிறுவனங்களையும் தொடர்பு கொண்டு இரண்டு வாரங்களுக்குள் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை அறிவிக்குமாறு பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் செயலாளருக்குக் குழுவின் தலைவர் பரிந்துரைத்தார். இது தொடர்பில் தேவையான ஆதாரங்களை வழங்குவது தொடர்பில் பாராளுமன்றம், திறைசேரி மற்றும் ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கவுள்ளதாக கோப் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

### தேங்காய் ஏலத்தில் ஒன்லைன் முறைமையை ஏற்படுத்தல்

தேங்காய் ஏலத்தை ஒன்லைன் மூலம் மேற்கொள்வதற்கு கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டாலும் அது தற்போது செயற்படாமலிருப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இதன் மூலம் வெளிப்படைத்தன்மையுடன் ஏலம் நடத்த முடியும் என்றும் தேங்காய் ஏலத்தில் ஒரு சிலரின் ஏகபோகத்தைத் தடுக்கும் நோக்கில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது என்றும் தெரியவந்தது. பல தரகர்களின் ஒத்துழைப்புடன் இந்த ஒன்லைன் முறைமையை நடைமுறைப்படுத்த அதிகாரத்தில் உள்ள அதிகாரிகள் சிலர் தயக்கம் காட்டுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. எனவே, இந்த ஏலத்தை இன்னும் வெளிப்படைத்தன்மையுடன் நடத்த மூன்று மாதங்களுக்குள் இந்த ஒன்லைன் முறைமையை மீளப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

### தேங்காய் எண்ணெய் உற்பத்தியை அதிகரித்து இறக்குமதியைக் கட்டுப்படுத்தல்

2020-2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் நுகர்வுக்காக 187,623 மெற்றிக் தொன் தேங்காய் எண்ணெய் மற்றும் 225,510 மெற்றிக் தொன் பாம் ஒயில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனால், இந்த நாட்டில் தேங்காய் எண்ணெய் பாவனையில் 22% உள்ளூர் உற்பத்தியிலும் 78% இறக்குமதி செய்யப்பட்ட எண்ணெயிலும் ஈடுபடுத்தப்படுவது பெரும் பிரச்சினையாக உள்ளது எனக் கலந்துரையாடப்பட்டது. மேலும், இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெயின் தரத்தில் உள்ள சிக்கல்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இதன்படி, தென்னை அபிவிருத்தி அதிகாரசபை, நுகர்வோர் அதிகாரசபை, சுகாதார அமைச்சு போன்ற சம்பந்தப்பட்ட நிறுவனங்களை அழைத்து விரிவான விசாரணைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

### டிஜிட்டல் விளம்பரப் பலகை அமைக்க தனியார் நிறுவனத்துக்கு முற்பணம் வழங்கல்

தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் நாரஹேன்பிட்டி தலைமை அலுவலகத்துக்கு முன்பாக டிஜிட்டல் விளம்பரப் பலகை அமைப்பதற்காக ஏறத்தாழ 5 மில்லியன் ரூபா செலவிலான ஒப்பந்தம் 2021ஆம் ஆண்டு எவ்வித எழுத்துமூல ஒப்பந்தமும் மேற்கொள்ளப்படாமல் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான முற்பணமாக ஒரு மில்லியன் ரூபா வழங்கப்பட்டதாகவும் சிலருடைய செல்வாக்கின் அடிப்படையில் பணம் வழங்கப்பட்டதாகவும் நிதிப் பணிப்பாளர் தெரிவித்தார். இது தொடர்பில் விரிவான விசாரணையை மேற்கொண்டு இரண்டு வாரங்களுக்குள் பொறுப்பானவர்களை வெளிப்படுத்துமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. அத்துடன், கணக்காய்வாளர் நாயகத்தின் மூலம் தனியான விசாரணை நடத்தவும் முடிவுசெய்யப்பட்டது.

### நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாத அறுவர் முன்னாள் தலைவரினால் நியமனம்

தென்னை பயிர்ச்செய்கை சபையின் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றாத 6 பேர் முன்னாள் தலைவரின் விருப்பத்துக்கமைய பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டமையும் இங்கு தெரியவந்தது. இது தொடர்பில் குழு தனது அதிருப்தியை வெளியிட்டதுடன் இவ்விவகாரம் பற்றிய அறிக்கையை இரண்டு வாரங்களுக்குள் வழங்குமாறும் வலியுறுத்தியது. இது தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

### சவூதிக்கு தென்னை தும்பு துகள் வழங்க உடனடி நடவடிக்கை

சவூதி அரேபியாவில் 50 மில்லியன் தென்னங் கன்றுகளை நடும் திட்டம் உள்ளதால், அதற்குத் தேவையான தென்னை தும்பு துகள்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை குறித்து ஆலோசிக்கப்படுவதால், அதனை இந்நாட்டில் பெறவேண்டியதன் அவசியம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது. நாட்டுக்கு கோடிக்கணக்கான டொலர் வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய திட்டம் என்பதால், இதில் அதிக முனைப்புடன் செயற்படவேண்டிய அவசியம் குறித்து குழுவில் வலியுறுத்தப்பட்டது.

### நிர்வாகச் சிக்கல்கள், முறைகேடுகள் குறித்து கவனம்

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையினால் 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட துங்கன்னாவ தென்னை தும்பு துகள் அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையத்தின் செயற்பாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் குழு கேள்வி எழுப்பியுள்ளது. இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான இயந்திரங்கள் சேதமடையும் அபாயம் உள்ளதால், இது குறித்து ஒரு மாதத்துக்குள் அறிக்கை அளிக்க குழுவின் தலைவர் பணிப்புரை விடுத்தார்.

இது தவிர, தென்னை பயிர்ச்செய்கை சபையின் பிரதான கட்டடத்தில் முன் அனுமதியின்றி ஒரு பகுதியை வழங்கியமையால் 21 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டமை, நீர்கொழும்பு விதை தென்னை அலகுக்கு கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ஆலோசனை நிறுவனமொன்றுக்கு ஏறத்தாழ 2 மில்லியன் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டமை உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து முறையான அறிக்கை அளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் அலுவலர்கள் ஆய்வு தொடங்கும் முன் நிறுவனத்துடன் தற்போதுள்ள சட்டப் பிணைப்பை அதிகரிக்கவும் இலட்சக்கணக்கில் செலவழித்து ஆராய்ச்சியைத் தொடங்கிய பின் அதனை மீளப்பெறும் நிறுவனத்துக்கு ஏற்பட்ட பெரிய நஷ்டத்தால் ஏற்படும் இழப்பை வசூலிக்கவும் குழு வலியுறுத்தியது.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான ஜகத் புஷ்பகுமார, சாந்த பண்டார, அநுர பிரியதர்ஷன யாப்பா, மஹிந்தானந்த அளுத்கமகே, தயாசிறி ஜயசேகர, இரான் விக்கிரமரத்ன, நிமல் லான்சா, எஸ்.எம்.எம். முஷாரப், சஞ்சீவ எதிரிமான்ன, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, ரஜிகா விக்கிரமசிங்க, மதுர விதானகே மற்றும் பேராசிரியர் சரித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதிய விமானப்படைத் தளபதிக்கு ஆனந்தா கல்லூரியில் கௌரவம்



இலங்கையின் 19 ஆவது விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு ஆனந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவரும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான ஜெனரல் ஓய்வுபெற்ற கமால் குணரத்ன தலைமையில் கல்லூரியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்லூரியின் அதிபர் உட்பட பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள், முன்னாள் விளையாட்டுக்குழு அமைப்பின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது விமானப்படைத் தளபதிக்கு பாதுகாப்புச் செயலாளர் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தார்.

ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரொருவர் விமானப்படைத் தளபதியாக நியமிக்கப் பட்டுள்ளமை இதுவே முதற்றடவை என்பது குறிப்பிடத்தக்கது.

## மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கொழும்பு விவேகானந்தா முதலிடம்







மாகாண மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் கொழும்பு விவேகானந்தா கல்லூரி மாணவிகள் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

மேல் மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் அண்மையில் கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் முதற்றடவையாகக் கலந்துகொண்ட விவேகானந்தா கல்லூரி மாணவிகள் முதலிடம் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தமதாக்கிக் கொண்டனர்.

வெற்றி பெற்ற மாணவிகள், கல்லூரி அதிபர் செல்வி தெய்வேந்திரம் தேவசியானி உட்பட ஆசிரியர்களை சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டனர்.

## அமைச்சர் விதுர - ஈரான் கலாசார நிலைய கவுன்சிலர் சந்திப்பு

அஷ்ரப் ஏ. சமத்



பௌத்த மற்றும் மதவிவகார கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவுக்கும் ஈரான் கலாசார நிலையத்தின் கவுன்சிலர் கலாநிதி மௌசாமி கொடரசிக்கவுக்குமிடையிலான சந்திப்பொன்று கொழும்பு ஈரான் கலாசார நிலையத்தில் நேற்றுமுன்தினம் (10) இடம்பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்கிடையிலான கலை கலாசாரம், புராதன அடையாளச் சின்னங்களை பாதுகாத்தல், அது பற்றிய நவீன தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொள்ளல், இத்துறை சார்ந்த இரு நாடுகளில் பயிலும் உயர்கல்வி மாணவர்களை கல்விச் சுற்றுலா ஆராய்ச்சி போன்ற விடயங்களில் ஈடுபடுத்தல் என்பன தொடர்பாக ஆராயப்பட்டதாக அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

## மின் கட்டணத் திருத்தங்களை வரவேற்கிறது JAAF

JOINT APPAREL ASSOCIATION FORUM
SRI LANKA APPAREL

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் ஜூலை - டிசம்பர் காலப்பகுதிக்கான மின்சாரக் கட்டணத்தில் அண்மையில் செய்யப்பட்ட திருத்தங்களை கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) வரவேற்றுள்ளது.

2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மற்றும் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட கட்டணத் திருத்தங்கள், தொழிற்றுறை சமர்ப்பிப்புகள் போன்ற விடயங்களை கவனத்தில் கொள்ளாமல் நெரிசல் இல்லாத (Off-peak) நேரங்களில் தொழிற்றுறை மின்சாரக் கட்டணங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டன. இதனால் செயற்பாட்டுச் செலவுகள் முக்கியமாக அதிகரித்ததால், நெரிசல் இல்லாத (Off-peak)நேரங்களில் வேலையின்மை பிரச்சினைக்கான அவதானம் காணப்பட்டது. மேலும் இந்தக் காலகட்டத்தில் ஆடைத் தொழிலின் போட்டி மற்றும் ஒட்டுமொத்த நிலைத்தன்மைக்கும் பிரச்சினையாக அமைந்தது.

2022 இல், Off-peak விகிதம் ரூபா 6.58/ kWh இலிருந்து ரூபா 15/ kWh ஆக அதிகரித்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில், Off-peak ரூபா 15 இலிருந்து ரூபா 34/kWh இன் கணிசமான அதிகரிப்புடன் ஆரம்பிக்கப்பட்டது, இதன் விளைவாக வெறும் 12 மாதங்களில் 400% மின் கட்டண விகிதங்கள் அதிகரிக்கப்பட்டன. கடந்த வாரம் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு (PUCSL) JAAF இனால் முன்னிலைப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில், இலங்கையானது பிராந்தியத்தில் அதிக தொழிற்றுறைக் கட்டண விகிதங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது. இது பிராந்தியத்தில் தொழிற்றுறையின் போட்டித்தன்மைக்கும் நாட்டின் பொருளாதாரம் அந்நிய செலாவணிக்கான அதிக தேவைப்பாடும் இந்த நேரத்தில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் திறனுக்கும் குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. எனவே, Off-peak நேரங்களில் தொழிற்றுறை மின்சாரக் கட்டணம் உட்பட தொழிற்றுறைக் கட்டணத்தை 29/kWh ஆகக் குறைப்பதற்கான மின்சார ஒழுங்கு முறையாளர்களின் இந்த முடிவை தொழிற்றுறை பெரிதும் பாராட்டுகிறது.

புதிய திருத்தங்கள் ஒட்டுமொத்த தொழிற்றுறை மின் கட்டண விகிதங்களை சுமார் 9% குறைத்துள்ளன. JAAF இந்த நடவடிக்கையைப் பாராட்டினாலும் உலகச் சந்தையின் பாதகமான நிலைமைகளின் காரணமாக, ஆடைத் துறையின் ஏற்றுமதி செயற்றிறன் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் அதிக தொழிற்றுறை மின் கட்டணக் குறைப்புகளை மின்சார ஒழுங்குமுறை நிறுவனம் பரிசீலிக்கும் என்று தொழிற்றுறையினர் நம்புகின்றனர். மே 2023 இல் ஆடை மற்றும் துணி ஏற்றுமதி வருமானம் 14.55% குறைந்துள்ளதால், தொழிற்றுறை மின்சாரக் கட்டண விகிதங்களைக் குறைப்பதன் மூலமும் தொழிற்றுறையினர் மேலும் செயற்பாட்டுச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும் அனுகூலங்களை அடைய முடியும். கடந்த ஆண்டு முதல் மீண்டும் மீண்டும் மின்கட்டண உயர்வுகளுக்கிடையே பாதிக்கப்பட்ட பகுதியில் தொழிற்றுறையின் போட்டித்தன்மையை மீட்டெடுப்பதில் இதுவும் ஒரு முக்கிய அங்கமாகும்.

தற்போதுள்ள முதலீடுகளைத் தக்கவைத்து, புதிய முதலீடுகளை ஈர்க்க வேண்டுமானால், இலங்கை தனது முதலீட்டாளர்களுக்கு ஒரு போட்டிக் கட்டணத்தை வழங்க வேண்டும். JAAF பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைத்தபடி, மின்சாரம் விநியோகிப்பாளரான இலங்கை மின்சார சபை (CEB) பாரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை செயற்படுத்துவதை அவசரமாக அளவிட வேண்டும், 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் 70% எரிசக்தியை புதுப்பிக்கத்தக்க ஆதாரங்களில் இருந்து உற்பத்தி செய்ய வேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். பிந்தையது புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தனியார் துறை முதலீட்டுக்கு ஊக்கியாக இருக்கும், இது CEB உற்பத்தியில் இருந்து சுயாதீனமான மின்சாரத் தேவைகளைப் பாதுகாக்க தனியார் மின்சார உற்பத்தி நிறுவனங்களுடன் தொழிற்றுறைகளை அனுமதிக்கிறது. இது, CEB மீதான சுமையைக் குறைக்கும். அரசுக்கு சொந்தமான நிறுவனங்களானது (SOE) நுகர்வோர் விலைகளைக் குறைக்கும் வகையில், அதிக உற்பத்திச் செலவுகளைக் குறைக்கவும் அதிகரித்த போட்டியின் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கவும் முன்னுதாரணமாக அமைகிறது.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அனுமதியுடன் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவினால் விமானப்படை செயற்பாட்டுப் பணிப்பாளராக எயார் வைஸ் மார்ஷல் ஆர்.எஸ். விக்கிரமரத்ன கடந்த 09ஆம் திகதி நியமிக்கப்பட்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (11.07.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 202.6808 | 214.9580 |
| கனேடியன் டொலர் | 228.1712 | 242.0538 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41.6004 | 44.7649 |
| யூரோ | 335.0428 | 353.1223 |
| ஜப்பான் யென் | 2.1606 | 2.2746 |
| சிங்கப்பூர் டொலர் | 225.9052 | 238.9050 |
| ஸ்ரேலிங் பவுன் | 391.5044 | 412.0644 |
| சுவிஸ் பிராங் | 342.0195 | 363.4218 |
| ஐ.அ. டொலர் | 305.1317 | 319.3229 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 829.6923 |
| குவைட் | குவைட் தினார் | 1,019.3108 |
| ஓமான் | ஓமான் றியால் | 812.4620 |
| கட்டார் | கட்டார் றியால் | 85.8370 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 83.3806 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 85.1558 |




கல்முனை பிரதேச செயலகப் பிரிவின் கீழ்வரும் மருதமுனை சமுர்த்தி வலயத்தில் ஏப்ரல், மே ஆகிய மாதங்களில் இரு சமுர்த்தி வீட்டு லொத்தர் வெற்றியாளர்களுக்கான தலா 02 இலட்சம் பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(10) இடம்பெற்றது. சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி கலந்து கொண்டு பயனாளிக்கு காசோலையை வழங்கினார். மேலும், பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எம்.நெளஷாத் கலந்து கொண்டிருந்தார். **படம்:** *மருதமுனை செய்தியாளர்*



ஹஜ் பெருநாளை முன்னிட்டு, சாய்ந்தமருது பிரதேச செயலகத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைத் தெரிவுசெய்து உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(11) நடைபெற்றது. சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனத்தின் அனுசரணையில் அதன் பிரதிநிதி பொறியியலாளர் எம்.சி.கமல் நிஷாத் மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சக கிராம உத்தியோகத்தர்களான எல்.நாஸர், எம்.என்.எம்.சஜா, ஏ.எம்.அஜ்ஹர், எஸ்.எம்.இல்பான், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஏ.இம்ரான் ஆகியோர் உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

**படம்:** *பொலிவேரியன் செய்தியாளர்*

# அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்



*திராய்க்கேணி செய்தியாளர்*

அட்டாளைச்சேனை பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாவுல்லாஹ் தலைமையில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை(11) இடம்பெற்றது.

இதன்போது அரச காணிகள் சுவீகரிக்கப்படுவது தடை செய்யப்படல், பயிர்ச் செய்கை காணிகளிலும் நெற் காணிகளிலும் கட்டிடங்கள் நிர்மாணிப்பது தடை செய்யப்படல், சம்பா நகர், ஆலங்குளம், அஷ்ரப் நகர் போன்ற கிராமங்களில் தெருவிளக்குகள் அமைத்துக் கொடுத்தல், குடிநீர் இல்லாத பிரதேசங்களில் குடிநீர் இணைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட புறத்தோட்டக் கிராமத்துக்கு மையவாடி மற்றும் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக பள்ளிவாசல் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல், அல்-முனீரா பாடசாலையின் ஆரம்பப் பிரிவுக்காக அமைக்கப்பட்ட புதிய கட்டிடங்களை திறந்து வைக்க நடவடிக்கை மேற்கொள்ளல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் சாபிர், உதவி பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், செயலாளர் எஸ்.ஏ.பாயிஸ், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.மஜீத், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி எம்.இஸ்மாயில், அட்டாளைச்சேனை கோட்டக்கல்வி அதிகாரி எம்.எச்.ரஷ்மி, அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் ஏனைய திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டு தமது கருத்துகளை வழங்கியிருந்தனர்.

குழுக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி திணைக்களத் தலைவர்கள் துரிதமாக எதிர்காலத்தில் தங்களது பணிகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் பிரித்தானியக் கிளை நிர்வாக உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய அமைப்பாளருமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் லண்டன் ஹரோவில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது தமிழீழ விடுதலை இயக்கம் பிரித்தானிய கிளை சார்பாக சாம், ரூபன் ஆகியோரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் பிரித்தானிய கிளை சார்பாக சிவபாலன், அல்வின், முகுந்தன் ஆகியோரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பாக பிரபு, பரமேஸ், சஜீ ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்றது. **படம்:** *வாழைச்சேனை செய்தியாளர்*



# 34 வருட கல்விப்பணியாற்றி ஓய்வுபெறும் அதிபர் வரதராஜன்

*வெல்லாவெளி செய்தியாளர்*

34 வருடங்களாக காத்திரமான தனது கல்விப்பணியாற்றிய கல்முனை வலய மணற்சேனை சுவாமி விபுலானந்தா வித்தியாலய அதிபர் நடராசா வரதராஜன் திங்கட்கிழமை(10) தனது சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் மட்டக்களப்பு திருப்பழுகாமத்தைப் பிறப்பிடமாகவும் கல்முனை உடையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா - புவனேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவார்.

1990.01.01இல் தனது ஆசிரியர் நியமனத்தைப் பொறுப்பேற்று நுவரெலியா டியன்சின் தமிழ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு கல்விப்பணியை ஆற்றத்தொடங்கினார். அதுமட்டுமல்லாமல், கடவளை தமிழ் மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரி, மஸ்கெலியா சென். ஜோசப் வித்தியாலயம், தலவாக்கலை பத்தனை தமிழ் வித்தியாலயம் மற்றும் கல்முனை சுவாமி விபுலானந்தா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் ஆசிரியப் பணியை ஈர்ந்துவந்தளித்து பல புத்திஜீவிகளையும் அரச சேவையாளர்களையும் திறமையான மாணவர்களையும் உருவாக்கிய பெருமை இவருக்கு தனித்துவமானதாகும்.



விளையாட்டுத்துறையில் மிகுந்த ஈடுபாடு உடையவராகத் திகழ்ந்து மாகாண, தேசிய மட்டங்களில் பல விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்று சாதனைகளையும் பதக்கங்களையும் நிலைநாட்டியுள்ள இவர், 07 வருடங்கள் கல்முனை சுவாமி விபுலானந்தா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஆசிரியர் விடுதி இரண்டையும் முன்பள்ளி பாடசாலைகளையும் அமைத்து பாடசாலையின் பௌதீக வளங்களையும் கொண்டு சேர்த்த பெருமையும் இவருக்குண்டு.

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பூர்த்தி செய்து ஆசிரியர் பணியை முன்னெடுத்த இவர், பழுகாமம் சிவமுத்துமாரியம்மன் ஆலயத்தலைவராக இருந்து பல சமூக, சமயப் பணிகளிலும் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



அல்-இக்ரஹ் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான மாபெரும் விளையாட்டு விழா பணிப்பாளர் எஸ்.எல்.மன்சூர் ஆசிரியர் தலைமையில் சம்மாந்துறையில் ஞாயிற்றுக்கிழமை (09) நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எம்.ஐ.எம்.மன்சூர், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி மூ.கோபாலரெத்தினம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர். மாணவர்களின் பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**படம்:** *அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்*

# சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்க துரித நடவடிக்கை

## கிழக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் உறுதி

*ஆரையம்பதி செய்தியாளர்*



கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக புதிதாகப் பதவியேற்றுள்ள அஜித் ரோஹண, மாகாணத்தில் இடம்பெற்றுவரும் போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

இவர் பதவியேற்றதை முன்னிட்டு மட்டக்களப்பு சென். ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் நிறுவன மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் ஏ.எல்.எம்.மீராசாகிபு மற்றும் உளவள ஆலோசகரும் சட்டத்தரணியுமான முகைதீன் ஆகியோர் சாலி பிரதிப் பொலிஸ்மா அதிபரை உத்தியோகபூர்வமாகச் சந்தித்து போதைப்பொருள் பாவனை மற்றும் அதன் விற்பனை, வீதிப் போக்குவரத்து சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்காது பயணித்து பல்வேறு விபத்துகளை ஏற்படுத்துவோர் மீது கடுமையான சட்டங்களை விதித்தல் உள்ளிட்ட பாதிப்புகளை தடுப்பதற்கான வழிமுறைகளை கையாள்வதற்கு முறையான செயற்றிட்டங்கள் அவசியம் என எடுத்துரைத்ததன் பிரகாரம் பிரதிப் பொலிஸ்மா அதிபர் இவ் வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

இதன்போது வைத்தியர் ஜெயசிங்கவினால் எழுதப்பட்ட அவசர முதலுதவி வழங்குவது எப்படி என்ற கையேடு ஒன்றும் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 'மட்டக்களப்பில் பொலிவுபெறும் பொதுசன நூலகம்' நூல் வெளியீடு

*மட்டக்களப்பு*




சந்திரோதயம் கலை இலக்கிய பெருமன்றம் மற்றும் கா கலை இலக்கிய வட்டம் ஆகியன இணைந்து நடத்தும் நூலியலாளர் என்.செல்வராஜாவின் 'மட்டக்களப்பில் பொலிவு பெறும் பொதுசன நூலகம்' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

எழுத்தாளரும் அதிபருமான ச.மணிசேகரன் தலைமையில் மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் காலை 9.30 மணியளவில் ஆரம்பிக்கப்படவுள்ள நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.மௌனகுரு, கௌரவ விருந்தினராக எழுத்தாளரும் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது நூல் அறிமுகத்தை கவிஞர் த.உருத்திராவும் நூல் நயவுரையை சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் க.மோகனதாசன், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகரும் இலங்கை நூலகர் சங்கத் துணைத் தலைவருமான செ. சாந்தரூபன் ஆகியோர் நிகழ்த்துவர்.



சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜம்இய்யத்துல் உலமா சபையினால் கல்முனை ஸாஹிரா கல்லூரியில் தரம் பத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான விசேட தர்பிய்யா நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. உலமா சபையின் தலைவர் எம்.எம்.சலீம்(ஷர்க்கி) தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அஷ்-ஷெய்க் எம்.ஏ.எம்.அன்பாஸ் முப்தி(ஹாஸிமி) வளவாளராகக் கலந்துகொண்டு விசேட உரை நிகழ்த்தினார். நிகழ்வில் மௌலவி அஷ்-ஷெய்க் எஸ்.எம்.நபார் (அஸ்ஹரி), கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர், உலமாக்கள், ஆசிரியர்கள் உட்பட பெருந்தொகையான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# பசுமை வகுப்பறை திறந்து வைப்பு



*மீனோடைக்கட்டு செய்தியாளர்*

திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி, சாஹிரா கல்லூரி மற்றும் சிங்கள மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் முதல் பசுமை வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை(10) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை தவிசாளர் பி.மதனவாசன் கலந்துகொண்டு குறித்த பாடசாலையில் ஒழுங்கமைக்கப்பட்ட பசுமை முன்மாதிரி வகுப்புகளைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் ரீ.ரவி, லயோலா சுற்றுச்சூழல் மற்றும் நீதி மையத்தின் பணிப்பாளர் Rev.Dr. Thierry J.Robouam, கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.ரி.முஹம்மட் பாரிஸ், ரின்கோ எய்ட் பணிப்பாளர் தயாளினி ஹரிஹரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பிரதம அதிதி உரையாற்றுகையில், பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையிலிருந்து முற்றாக விடுபடவும் அதனை ஒழிப்பதற்கும் மாணவர்களாகிய நீங்கள் முன்னுதாரணமாக செயற்படவேண்டும். மேலும், பசுமை வகுப்பறை நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக வடிவமைக்கப்பட்ட கற்றல் சூழலாகும். இது சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பிளாஸ்ரிக் பாவனையை கட்டுப்படுத்தல் மற்றும் பாதுகாப்பை ஊக்குவிக்கும் ஓர் இடமாகவும் இருக்கின்றது.

இதனூடாக சுற்றுச்சூழலை மதிக்கும் வகையில் எவ்வாறு வாழவேண்டும் மற்றும் கற்றுக்கொள்வது என்பது குறித்து மாணவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் வகுப்பறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களாகிய நீங்கள் இவ்வாறு செயற்படுவதன் மூலம் திருகோணமலை நகர் மட்டுமல்ல, எமது மாவட்டம், மாகாணம், நாடு ஒரு முன்னேற்றப் பாதையை நோக்கிப் பயணிக்கும் - என்றார்.

வன்னி ஹோப் அவுஸ்திரேலிய நிறுவனத்தின் நிதிப் பங்களிப்போடு ரின்கோ எய்ட் நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு இத்திட்டம் செயற்படுத்தப்பட்டு வருவதுடன், பாடசாலைகளில் பசுமை வகுப்பறை அமைப்பது பற்றியும் பசுமை வளாகங்கள் அமைப்பது தொடர்பாகவும் பாடசாலை மாணவர்களைக் கொண்டு சிறந்த செயற்றிட்டங்களை எதிர்வரும் காலங்களில் செயற்படுத்துவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் ஈ.பீ.எஸ்.ஐ.இணைப்பாளராகவும் சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற ஏ.எச்.எம்.பௌஸின் சிறந்த சேவையைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் ஏ.ஜி.றிஷாத் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

**படம்:** *நிந்தவூர் செய்தியாளர்*



அம்பாறை அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஓய்வுபெற்ற முன்னாள் அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸூக்கு சிறுவயதிலிருந்தே கல்வி புகட்டிய ஆசிரியர்களால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. அம்பாறை மாவட்ட செயலக வளாகத்தில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் அவரது பாடசாலை நண்பர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. **படம்:** *நிந்தவூர் செய்தியாளர்*

# நீதித்துறையிலுள்ள தமிழர்களை மிரட்டும் வகையிலான சரத் வீரசேகர எம்.பியின் பேச்சுக்கு சட்டத்தரணிகள் எதிர்ப்பு

## கல்முனை, மட்டக்களப்பில் சுலோகங்களை ஏந்தி பணிப்புறக்கணிப்பு ஆர்ப்பாட்டம்



*பாறுக் ஷிஹான்*

பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி நீதித்துறையிலுள்ள தமிழர்களை மிரட்டும் வகையில் பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்த கருத்துக்கு கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் நீதிமன்ற பணிப்புறக்கணிப்பில் செவ்வாய்க்கிழமை(11) ஈடுபட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் எம்.ஐ.றைசுல் ஹாதி தலைமையில் ஒன்று கூடிய சட்டத்தரணிகள், சரத் வீரசேகர எம்.பியின் உரைக்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதுடன் சுலோகங்களை ஏந்தியவாறு எதிர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு, குருந்தூர்மலையில் தமிழ், பௌத்த வழிபாட்டு எச்சங்களின் மீது, சட்டவிரோதமாகக் கட்டப்பட்டுள்ள சிங்கள, பௌத்த கட்டுமானங்களைப் பார்வையிட முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா அண்மையில் சென்றிருந்தார்.

அப்போது தனது குழுவினருடன் அங்கு வந்திருந்த பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, தேவையில்லாமல் மூக்கை நுழைத்து வாங்கிக் கட்டினார். அரசியல்வாதிகள் நீதிமன்ற விசாரணையில் மூக்கை நுழைக்கக்கூடாது என எச்சரித்து வீரசேகரவை அங்கிருந்து நீதிபதி அகற்றினார்.

இதனால் கொதிப்படைந்த வீரசேகர எம்.பி. அண்மையில் பாராளுமன்ற சிறப்புரிமையைப் பயன்படுத்தி, நீதித்துறையிலுள்ள தமிழர்களுக்கு மிரட்டல் விடுக்கும் பாணியில் பேசியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்தும் விலகியிருக்க கல்முனை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.




*கனகராசா சரவணன்*

பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிபதிகளை எச்சரித்து வெளியிட்டுள்ள கருத்தைக் கண்டித்து மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கம் செவ்வாய்க்கிழமை(11) பணிப் பகிஷ்கரிப்பை மேற்கொண்டு மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்னால் கண்டன ஆர்ப்பாட்டத்தில் செவ்வாய்க்கிழமை(11) ஈடுபட்டது.

கடந்த தில தினங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் நீதிபதிகளை எச்சரித்து சரத் வீரசேகர எம்.பி. தெரிவித்த கருத்தைக் கண்டித்து மட்டக்களப்பு சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி போ.பிறேமநாத் பணிப்பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

இதனையடுத்து, நேற்றுக்காலை 09 மணிக்கு மட்டக்களப்பு நீதிமன்ற கட்டிடத் தொகுதிக்கு முன்னால் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள், ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற சட்டத்தரணிகள் மற்றும் மட்டு. நீதிமன்ற கட்டிடத் தொகுதி சட்டத்தரணிகள் ஒன்றிணைந்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் "நீதித்துறை சுதந்திரத்துக்காய் குரல்கொடுப்போம், நீதித்துறை சுதந்திரத்தை உறுதி செய், நீதித்துறைக்கு அரசியல் தலையீடு வேண்டாம். நீதித்துறையின் சுதந்திரமே ஜனநாயகத்தின் தூண், நீதித்துறையில் இனவாதத்தை கலக்காதே" போன்ற சுலோகங்களை ஏந்தியவாறு சுமார் ஒரு மணித்தியாலம்வரை கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.



## அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய பாடநெறிக்கு

# விண்ணப்பம் கோரல்

*மீரா நகர் செய்தியாளர்*

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரியில் ஆறு மாத கால புதிய பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்லூரியின் பதில் அதிபர் எம்.எம்.ஹஸன் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், அலுமினியப் பொருள் ஒருங்கமைத்தலில் சான்றிதழ், நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர் சான்றிதழ், கள உதவியாளர் - விவசாயம், கணினி கிராபிக் வடிவமைப்பு சான்றிதழ், வீட்டுப்பாவனை மின்னியல் உபகரணங்கள் திருத்துதல் சான்றிதழ், கையடக்கத் தொலைபேசி திருத்துதல் ஆகிய பாடநெறிகளுக்கே விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடநெறிகள் தொடர்பில் மேலதிக விபரம் மற்றும் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு தொழில்நுட்பக் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் பிரிவுக்கு நேரடியாக வருகை தந்து அல்லது 067 22 79 865 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்புகொள்ளுமாறு வழிகாட்டல் பிரிவு மாணவர்களைக் கேட்டுள்ளது.

# பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்தும் சர்வதேச விழிப்புணர்வு மரதன் ஓட்டப்போட்டி

## உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்களும் பங்கேற்பு

*அட்டாளைச்சேனை, பொத்துவில் செய்தியாளர்கள்*

அதிகரித்து வரும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனையை பொத்துவில் அறுகம்பே பிரதேசத்தில் இருந்து முற்றாக நீக்கும் வேலைத்திட்டத்துக்கு அமைவாக அறுகம்பே அபிவிருத்தி போரத்தினால் சர்வதேச அரை மரதன் ஓட்டப்போட்டி இடம்பெறவுள்ளதாக போரத்தின் தலைவரும் இயன்மருத்துவருமான இஸட்.எம்.ஹாஜித் தெரிவித்தார்.

இது தொடர்பிலான அறிமுக நிகழ்வும் ஊடகவியலாளர் மாநாடும் திங்கட்கிழமை(10) மாலை பொத்துவில் பிரதேசத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், உல்லாசப் பயணிகளின் கேந்திர நிலையமாக உள்ள அறுகம்பே பிரதேசத்தில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவற்றின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இதன்மூலமாக பல்வேறான பாதிப்புகளை நாம் எதிர்நோக்கி வருகின்றோம். கடல் வளம் சுற்றுப் புறச்சூழல் போன்றன இதனால் பாதிக்கப்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய கால கட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

சர்வதேச அளவில் எமது அமைப்பு அரை மரதன் ஓட்டப் போட்டியை ஒழுங்கு செய்து இதன்மூலம் கிடைக்கப்பெறும் நிதியைக் கொண்டு பொத்துவில் பிரதேசத்தில் கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதோடு, பிளாஸ்ரிக் பாவனையற்ற பொத்துவில் பிரதேசத்தைக் கட்டியெழுப்புவதே எமது பிரதான நோக்கமாக உள்ளது.

உலகரங்கில் இடம்பெற்றுவரும் பிரசித்திபெற்ற மரதன் ஓட்டப்போட்டிகளைப் போன்று அறுகம்பே அரை மரதன் போட்டியும் இடம்பிடிக்க வேண்டும் எனும் நோக்கில், அறுகம்பே அபிவிருத்தி போரம் நான்காவது தடவையாகவும் இம்மரதன் ஓட்டப்போட்டியை நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது. இதனை மேலும் சிறப்பாக நடத்துவதற்கு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் எமது அமைப்புடன் கைகோர்த்துள்ளன.



ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் கொரோனா அனர்த்தத்தினால் நாட்டின் சுற்றுலாத்துறை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தது. அந்த நிலைமைகள் மாற்றமடைந்து தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அறுகம்பை பிரதேசத்தை நோக்கி அதிகரித்துக் காணப்படுகிறது. இக்காலகட்டத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையிலும் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் பொருட்டும் இம்மரதன் போட்டியை சர்வதேச தரத்தில் நடத்துவதற்குரிய சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டி நிகழ்ச்சியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்களும் பங்கேற்கவுள்ளதுடன், எமது பிரதேச மரதன் ஓட்ட வீரர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு வெற்றிபெறும் வீரர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கவுள்ளோம்.

இலங்கை சுற்றுலாத்துறை மற்றும் இராணுவத்தின் 242ஆவது படைப்பிரிவின் பூரண ஒத்துழைப்புடன், பொத்துவில் அறுகம்பே அபிவிருத்தி போரம் ஏற்பாடு செய்துள்ள அறுகம்பே சர்வதேச அரை மரதன் ஓட்டப்போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி மிகவும் கோலாகலமாக இடம்பெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயர்களை 0767016888 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே பதிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இராணுவத்தின் 242ஆவது படையணியின் சிவில் விவகார அதிகாரி கேர்ணல் பிரசன்ன டீ சில்வா, பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹிம், அறுகம்பே விசேட அதிரடிப் படை முகாம் தலைமை பரிசோதகர் டீ.எம்.ஆர்.செனவிரத்ன, பொலிஸ் பரிசோதகர் டி.எம்.ஏ.ஆர்.திசாநாயக்க, அறுகம்பே அபிவிருத்தி போரத்தின் ஆலோசகரும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான எம்.எச்.எம்.ஜமாஹிம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கவனயீனம் உயிர்களை காவுகொண்டுள்ளது

## மன்னம்பிட்டி பஸ் விபத்து குறித்து ஹரீஸ் எம்.பி. இரங்கல்

*மாளிகைக்காடு செய்தியாளர்*

பொடுபோக்குகள், கவனயீனம் காரணமாக அண்மைக்காலமாக வீதி விபத்துகள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அதன் தொடர்ச்சியாக கதுறுவெலையிலிருந்து பயணித்த தனியார் பஸ், மன்னம்பிட்டி, கொட்டலீய பாலத்தில் விபத்துக்குள்ளாகி ஆற்றில் விழுந்ததனால் 10க்கும் அதிகமானவர்கள் மரணித்த விடயம் எல்லோருக்கும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என ஸ்ரீல.மு.கா. பிரதித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, குறித்த பகுதியில் தொடர்ந்தும் விபத்துகள் நடைபெறுவதை அறிந்தும் பொடுபோக்காக சாரதிகள் தொடர்ந்தும் வாகனங்களைக் கண்மூடித்தனமாகச் செலுத்துவதானது உயிர்களுடன் விளையாடுவதாகவே அமைந்து விடுகிறது.

இளைஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், குடும்பஸ்தர்கள், பெண்கள் என குறித்த விபத்தில் காலமான அத்தனை உயிர்களும் பெறுமதியானவை. இவர்களின் இழப்பு அவர்களின் குடும்பத்தினது இழப்பு மட்டுமல்ல, இந்த நாட்டின் இழப்பாக அமைந்துள்ளது.



ஆசனங்களுக்கு மேலதிகமான பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு, வேகக் கட்டுப்பாட்டை இழந்து வாகனங்களைச் செலுத்திச் செல்லும் சாரதிகள் அவர்களது வாகனத்தில் பயணிக்கும் ஒவ்வொரு உயிரும் பெறுமதியானது என்பதை அறிந்துகொண்டு வாகனத்தைச் செலுத்த வேண்டும். இப்படியான விபத்துகளுக்கு வாகன உரிமையாளர்கள், சாரதிகள் மட்டுமின்றி, பாராமுகமாக இருந்த அதிகாரிகளும் பொறுப்புக் கூற வேண்டும்.

இந்த விபத்தில் காலமான அத்தனை எனது உறவுகளுக்கும் எல்லாம் வல்ல இறைவன் நல்ல நிலையை வழங்க பிரார்த்திப்பதோடு, காயமடைந்தவர்கள் விரைவில் குணமாகி வீடு திரும்பவும் பிரார்த்திக்கிறேன். விபத்தில் காலமானவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# நிரந்தர நியமனம் வழங்கக்கோரி டெங்கு தடுப்பு உதவியாளர்கள் ஆர்ப்பாட்டம்

*நிந்தவூர்*

சுமார் ஏழு வருடங்களுக்கும் மேலாக ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றும் தங்களை நிரந்தரமாக நியமிக்குமாறு கோரி, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகப் பிரிவில் கடமையாற்றும் டெங்கு தடுப்பு உதவியாளர்கள் செவ்வாய்க்கிழமை(11) காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள், கடந்த கொவிட் தொற்று முதல் இன்று வரைக்கும் பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும் தங்களது விடயத்தில் அரசு பாராமுகமாக செயற்பட்டு வருகின்றது. தங்களுக்குப் பிறகு ஒரு இலட்சம் தொழில் வாய்ப்பின்மூலம் வழங்கப்பட்ட நியமனங்களுக்கு, தற்போது நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், பொது மக்களின் நன்மை கருதி பல சிரமங்களுக்கு மத்தியில் கடமையாற்றும் எமக்கு இதுவரைக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் அரசாங்கம் காலம் தாழ்த்தி வருகின்றது என்றனர்.



அத்துடன், நேற்றைய தினம் அகில இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நாடு தழுவிய ரீதியில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததுடன், ஒப்பந்த அடிப்படையில் கல்முனை பிராந்தியத்தில் 44 டெங்கு தடுப்பு உதவியாளர்கள் கடமையாற்றி வருவதுடன், அகில இலங்கை ரீதியில் ஆயிரத்து 140 பேர் டெங்கு தடுப்பு உதவியாளர்களாகக் கடமையாற்றி வருவதாக அகில இலங்கை டெங்கு தடுப்பு உதவியாளர்கள் சங்கத்தின் தலைவர் கே.முஸம்மில் தெரிவித்தார்.

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மாவட்ட செயற்குழுக் கூட்டம்




*வாழைச்சேனை செய்தியாளர்*

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட செயற்குழுக் கூட்டம் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தலைமையில் கட்சியின் மாவட்டத் தலைமைச் செயலகத்தில் திங்கட்கிழமை(10) இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் தலைவர் எஸ்.நவேந்திரா, செயலாளர் ஐ.கதிர், கொள்கைப் பரப்புச் செயலாளர் சாந்தன், மாவட்ட இணைப்பாளர் சுதா மற்றும் தீபன், மகளிர் அணியினர் உள்ளிட்ட கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கட்சியின் கடந்த காலச் செயற்பாடுகள், ஜனநாயக ரீதியில் செயற்படும் போராளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், கட்சிக் கட்டமைப்பு விடயங்கள், எதிர்காலச் செயற்றிட்டங்கள், போராளிகளுக்கான வாழ்வாதார ஊக்குவிப்புகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இதேவேளை, கட்சி உறுப்பினர்களின் பல்வேறுபட்ட கருத்தாடல்களுக்கு தலைவர், செயலாளர் உள்ளிட்டவர்களால் விளக்கங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## போடியார் புலம்பல்!



***பழைய கூட்டாளி கருணாவோட இப்பத்தய ஜனாதிபதி நரில் சந்தித்து பேசுநாங்களாமே? என்ன பேசியிருப்பாங்க எண்டா 2004, லில உன்ன வச்சி புலிகள உடைத்த மாதிரி 2015, ல அந்த எம்பிய வைச்சி தமிழ்தேசியத்த உடைச்சுப்போட்டன் இனி 2023, ல எண்ட அடுத்த நகர்வு ஆருக்கு குழிபறிக்கலாம் எண்டத பற்றி கதைக்கத்தான் வரச்சொன்னன் என்ன மொகமெலாம் ஊதி இருக்கு நல்லா கசிப்பு அடிக்கிறதாக கேள்வி உண்மையா?எண்டு கேட்டாரோ..?அதற்கு கருணா என்ன சொல்லியிருப்பான் உங்கட புண்ணியத்தால என்ன ஒரு ஆலோசகராக போடுங்க sir மட்டத புறகு கதைப்பன் எண்டிருப்பான் எலுவா.?***

# வீதி விபத்துகளை தடுக்கும் நோக்கில் முறையான வேலைத்திட்டம் அவசியம்

## அடிப்படை மனித உரிமை மீறல் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர்

*மாளிகைக்காடு செய்தியாளர்*

மன்னம்பிட்டி பஸ் விபத்தில் இதுவரையான தகவல்களின் படி 11 பேர் மரணித்து, 40 பேரளவில் காயமடைந்துள்ளனர் என அறியக்கூடியதாக உள்ளது. இதுபோன்ற கோர விபத்துகள் இனிமேலும் இடம்பெறாமல் போக்குவரத்து அமைச்சும் மாகாண வீதிப் பயணிகள் அதிகார சபையும் பொலிஸ் திணைக்களமும் இதற்கான சில வேலைத்திட்டங்களை முறையாகச் செய்ய வேண்டுமென அடிப்படை மனித உரிமை மீறல் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.ஏ.நளீர் கேட்டுக்கொண்டுள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும், உண்மையில் இந்தத் துயர் நிறைந்த சம்பவம் என்னையும் மிக வேதனைக்குட்படுத்தியுள்ளது. மன்னம்பிட்டி பஸ் விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.



அத்துடன், விபத்தில் படுகாயமடைந்தவர்கள் விரைவில் நலன்பெற பிரார்த்திப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இப்படியான கவனயீனமான விபத்துகள் சாதாரண மக்களின் உயிருடன் விளையாடுவதாக அமைந்துள்ளது. இந்த பொடுபோக்கான செயலுக்கு பொறுப்பேற்கவேண்டியது யார்? விபத்தில் உயிரிழந்த குடும்பங்களுக்கு பொடுபோக்கான செயலுக்கு துணைபோன அதிகாரிகள் கூறப்போகும் நியாயம் என்ன? குறித்த பஸ் தொடர்பில் தொடர்ந்தும் விமர்சனம் இருந்த சூழ்நிலையில் அதனைக் கவனத்தில் கொள்ளாமல் விட்டது ஏன்? என கேள்வியெழுப்பியுள்ளார்.

# காதலிக்கு ரூ.900 கோடி வழங்கிய இத்தாலி முன்னாள் பிரதமர் சில்வியோ



தமது கடைசி காலத்தில் காதலித்த மார்தா பாசினாவுக்கு ரூ.900 கோடி சொத்துகளை உயிலில் எழுதிவைத்துள்ளார் இத்தாலியின் முன்னாள் பிரதமர் சில்வியோ பெர்லுஸ்கோனி.

இத்தாலியின் பிரதமராக 4 முறை சில்வியோ பெர்லுஸ்கோனி பதவி வகித்தார். அவருக்கு 2 மனைவிகள். 2020ஆம் ஆண்டில் மார்தா பாசினா என்ற பெண் எம்.பியுடன் அவருக்கு காதல் மலர்ந்தது. அப்போது அவருக்கு 83 வயது. மார்தாவுக்கு 33 வயது.

கடந்த மாதம் 12ஆம் திகதி பெர்லுஸ்கோனி உயிரிழந்தார். தனது ரூ.56 ஆயிரம் கோடி மதிப்பிலான சொத்துகள் தொடர்பாக அவர் உயில் எழுதி வைத்துள்ளார்.

இதன்படி பெர்லுஸ்கோனியின் முதல் மனைவிக்கு பிறந்த மகன், மகளுக்கு பினின்வெஸ்ட் ஊடக நிறுவனத்தில் 53 சதவீத பங்குகளும் 2ஆவது மனைவிக்கு பிறந்த இரு மகள்கள், மகனுக்கு 47 சதவீத பங்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

பெர்லுஸ்கோனிக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்களையும் முதல் மனைவி, 2ஆவது மனைவியின் குடும்பங்கள் இணைந்து நடத்தவேண்டும் என்று உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தவிர, பெர்லுஸ்கோனியின் தம்பி பியர், நெருங்கிய நண்பர் மார்செல்லோ ஆகியோருக்கும் சொத்துகள் ஒதுக்கியுள்ளார்.

கடைசி காலத்தில் காதலித்த மார்தா பாசினாவுக்கு ரூ.900 கோடி சொத்துகளை பெர்லுஸ்கோனி வழங்கியுள்ளார். இதன்படி இத்தாலியின் ஆர்கோர் பகுதியில் பிரம்மாண்ட வீடு மார்தாவுக்கு கிடைத்துள்ளது. இந்த வீடு இத்தாலியின் ஸ்டாம்பா மன்னர் குடும்பத்துக்குச் சொந்தமான 18ஆம் நூற்றாண்டு அரண்மனையாகும். கடந்த 1974ஆம் ஆண்டில் அரண்மனையை பெருந்தொகை கொடுத்து பெர்லுஸ்கோனி வாங்கியமை குறிப்பிடத்தக்கது.

# ஆரம்பமானது நேட்டோ உச்சிமாநாடு: முடிவுக்கு வருமா உக்ரைன் – ரஷ்யப் போர்?

## உக்ரைனை நேட்டோவில் இணைப்பது குறித்து தெளிவான தகவலை தற்போதே தெரிவிக்குக - ஸெலென்ஸ்கி வலியுறுத்து



நேட்டோ உச்சிமாநாடு லித்துவேனியா தலைநகரான வில்னிசில் நேற்று (11) ஆரம்பமாகிய நிலையில், இம்மாநாடு உக்ரைன் – ரஷ்யப் போரை முடிவுக்கு கொண்டுவருமா அல்லது தீவிரப்படுத்துமா என்ற எதிர்பார்ப்பை மேலோங்கச் செய்துள்ளது.

இரண்டுநாட்கள் இடம்பெறும் இம்மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்காலத்தில் உக்ரைனை நேட்டோவில் இணைப்பது குறித்து இக்கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 31 நேட்டோ உறுப்புநாடுகளும் உக்ரைனுக்கு தங்கள் ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

இதனிடையே சுவீடனை நேட்டோவில் இணைப்பதற்கு துருக்கி ஆதரவை வெளியிட்டுள்ளது. நீண்டகாலமாகவே குர்தீஷ் பயங்கரவாதிகளை ஆதரிப்பதாகக் கூறி நேட்டோவில் இணையவிடாமல் சுவீடனுக்கு துருக்கி முட்டுக்கட்டை போட்டு வந்தது. துருக்கியின் பாதுகாப்பு குறித்து தொடர்ந்த பேச்சுவார்த்தைகளையடுத்து சுவீடனை ஆதரிக்க துருக்கி முன்வந்துள்ளது.

**உக்ரைனை நேட்டோவில் சேர்ப்பது குறித்த தெளிவான தகவல் வேண்டும்**

இந்நிலையில், ''உக்ரைனை நேட்டோ கூட்டணியில் உறுப்புநாடாக சேர்ப்பது குறித்த தெளிவான தகவலை தற்போதே தெரிவிக்கவேண்டும்'' என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து ஸெலென்ஸ்கி தெரிவிக்கையில்,

நேட்டோ கூட்டணியில் இணைய உக்ரைனுக்கு தகுதி இருக்கின்றது. தற்போது போர் நடைபெறுவதால் உக்ரைனை உடனடியாக கூட்டணியில் சேர்க்காவிட்டாலும், அதுதொடர்பான தகவலை இப்போதே தெரிவிக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

''போர்ச் சூழலில் உக்ரைனை உடனடியாக நேட்டோ அமைப்பில் சேர்க்க முடியாது'' என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்த நிலையில், ஸெலென்ஸ்கி இவ்வாறு தெரிவித்துள்ளமை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

உலக செய்திகள்

# நிலநடுக்கத்தால் வெடித்து சிதறும் ஐஸ்லாந்து எரிமலை



ஐஸ்லாந்து தலைநகர் ரெய்காவிக் அருகே நிலநடுக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்குள்ள பெக்ரடால்ஸ்ஃப்ஜால் எரிமலை வெடித்துச் சிதறியுள்ளது.

வடக்கு அட்லாண்டிக் கடலிலுள்ள தீவு நாடான ஐஸ்லாந்தின் தலைநகரமான ரெய்காவிக்கை சுற்றியுள்ள பகுதிகளில் சில நாட்களுக்கு முன்னர் 2 ஆயிரத்து 200 முறை நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்நாட்டு வானிலை மையம் தகவல் தெரிவித்திருந்தது. எரிமலை எப்பொழுது வேண்டுமென்றாலும் வெடிக்கலாம் எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்நிலையில், கடந்த சில தினங்களாக ஐஸ்லாந்தில் ஏற்பட்டு வந்த நிலநடுக்கம் காரணமாக நேற்று (11) தலைநகர் ரெய்காவிக்கிலிருந்து 40 கிலோமீற்றர் தொலைவில் உள்ள எரிமலையில் வெடிப்பு ஏற்பட்டது. நெருப்புக் குழம்பு வெளியேறியதால் புகை மண்டலமாகக் காட்சியளித்தது.

இந்த எரிமலை ஓராண்டுக்குள் இரண்டாவது முறையாகவும் வெடித்துள்ளது. மக்கள் அப்பகுதிக்கு செல்லவேண்டாமென்றும் அறிவுறுத்தியுள்ளனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு எரிமலை வெடித்தபோது, பல மாதங்களுக்கு தீக்குழம்பு வெளியேறி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# தக்காளிக்கு பிளஸ் பாதுகாப்பா? உத்தரப்பிரதேசத்தில் இருவர் கைது



உத்தரப்பிரதேச மாநிலத்தில் சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனக்குச் சொந்தமான காய்கறி கடையில் விற்பனை செய்யப்படும் தக்காளியை பாதுகாக்க பாதுகாவலர்களை (பௌன்சர்கள்) நியமித்துள்ளார். இந்த விவகாரத்தில் இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தியா முழுவதும் அதிக விலைக்கு தக்காளி விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பெரும்பாலான வீடுகளில் சமையலில் தக்காளி பயன்படுத்துவது இப்போதைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உணவகங்களிலும் இதே நிலைதான். இந்தச் சூழலில் உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசி பகுதியைச் சேர்ந்த சமாஜ்வாடி கட்சியைச் சேர்ந்த அஜய் என்பவர் தனக்குச் சொந்தமான காய்கறி கடையில் தக்காளியை பாதுகாக்க பாதுகாவலர்களை நியமித்துள்ளார். இது சமூக வலைத்தளங்களில் கவனம் பெற்றது.

இந்த விவகாரத்தை அவதூறு வழக்காக பதிவுசெய்த உத்தரப் பிரதேச மாநில பொலிஸார் அஜய் மற்றும் அவரது கடையை நிர்வகித்து வந்த தந்தை மற்றும் மகன் மீது வழக்கு பதிவுசெய்துள்ளனர். தொடர்ந்து அந்தக் கடையிலிருந்த தந்தை மற்றும் மகன் கைதுசெய்யப்பட்டனர். ஆனால், அஜய் தலைமறைவாகியுள்ளார்.

“தக்காளி விலை அதிகம் இருப்பதனால் மக்கள் பேரம் பேசி வாங்கி வருகின்றனர். அதைத் தடுக்கவே பாதுகாவலர்களை நியமித்துள்ளோம்” என ஒரு வீடியோவில் அஜய் தெரிவித்திருந்தார். அதை தனது ட்வீட் பக்கத்தில் பகிர்ந்த சமாஜ்வாடி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், ''நியாயப்படி பா.ஜ.க. தக்காளிக்கு Z பிளஸ் பாதுகாப்பு வழங்க வேண்டும்'' என தெரிவித்துள்ளார்.

# சொல்லி அடிக்கும் நியூசிலாந்து வீராங்கனை சுசி பேட்ஸ்



ரமணி

10 நாடுகளில் ரி20 போட்டியில் அரைசதம் அடித்த முதல் பெண் கிரிக்கெட் வீராங்கனை என்ற சாதனையை படைத்துள்ளார் நியூசிலாந்து வீராங்கனை சுசி பேட்ஸ்.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது ரி20 போட்டியில் அவர் இந்தச் சாதனையை படைத்தார். இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியில் நியூசிலாந்து வீராங்கனை சுசி பேட்ஸ் அபாரமாக விளையாடி 53 பந்துகளில் 52 ஓட்டங்கள் அடித்து அரைசதம் கடந்தார். இது ரி20யில் இவரது 26ஆவது அரைசதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை, இந்தியா, தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத் தீவுகள், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இங்கிலாந்து, அயர்லாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் அரைசதம் அடித்துள்ளார்.

# டிசம்பரில் இலங்கையில் ஆரம்பமாகும் 10 தொடர்

இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் முதல் முறையாக நடைபெறவுள்ள அணிக்கு 10 ஓவர்கள்கொண்ட லங்கா ரி10 கிரிக்கெட் தொடர் இந்தாண்டு டிசம்பர் 12ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

முன்னதாக ரி10 போட்டிகள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவரும் நிலையில் முதல் முறையாக இலங்கையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த தொடர் ஜூன் மாதம் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தாலும் டிசம்பர் மாதத்துக்கு பிற்போடப்பட்டது. இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று முன்தினம் வெளியானது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# மன்னார் ப்ரீமியர் லீக் சீசன் - 2 ஆரம்பம்



மன்னார் நகர் நிருபர்

மன்னார் மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் மன்னார் ப்ரீமியர் லீக் (எம்.பி.எல்) சுற்றுப்போட்டி கடந்த வருடம் ஆரம்பமான நிலையில் 2ஆவது சீசன் கடந்த வாரம் மின்னொளியில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக மன்னார் நகரத்திலிருந்து 12 உதைபந்தாட்ட கழகங்களைச் சேர்ந்த 300 வீரர்கள், உரிமையாளர்கள், விருந்தினர்கள் ஊர்வலமாகச் சென்று மன்னார் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் வைக்கப்பட்டுள்ள தேசிய சாதனையாளர் அமரர் பியுசிலஸின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி அங்கிருந்து வாகனம் பவனி ஊடாக ஜோசப்வாஸ் நகரில் அமைந்துள்ள முன்னாள் ஆயர் ராஜப்பு யோசேப்பு ஆண்டகை விளையாட்டு மைதானத்தை சென்றடைந்தனர்.

பின்னர் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பின்னர் உரிமையாளர்கள் மற்றும் வீரர்கள் அறிமுகம் இடம்பெற்றதோடு முதலாவது போட்டி மின்னொளியில் ஆரம்பமானது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணத்தின் முன்னாள் பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உட்பட கௌரவ விருந்தினர்களும் கலந்துகொண்டனர்.

# ஈரானில் போட்டிகளை நேரடியாக பார்வையிட பெண்களுக்கு அனுமதி

ஈரானின் உச்ச தேசிய பாதுகாப்பு கவுன்சிலானது பெண்கள் மைதானங்களில் நேரடியாக உதைபந்து போட்டிகளைக் காண அனுமதிக்க முடிவு செய்துள்ளதாக ஈரானிய உதைபந்து கூட்டமைப்பின் தலைவர் மெஹ்தி தாஜ் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உள்துறை அமைச்சு, விளையாட்டு மற்றும் இளைஞர் கொள்கை அமைச்சு, உதைபந்து கூட்டமைப்பு மற்றும் தகவல் அமைச்சின் இரண்டு அமைப்புகள் இந்த வேலையைச் செயல்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கி வருவதாக தாஜ் கூறியுள்ளார்.

உதைபந்து, ஈரானின் மிகவும் பிரபலமான பார்வையாளர் விளையாட்டாகும். டீம் மெல்லி என அழைக்கப்படும் ஈரானின் தேசிய அணிக்கு நாட்டில் பெரும் ஆதரவு உள்ளது. ஆனால், பெண்கள் அந்த விளையாட்டுகளை நேரிலோ அல்லது உணவகங்கள் போன்ற பொது இடங்களிலோ பார்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பெண்கள் சில சமயங்களில் ஆண்களைப்போன்று வேடமிட்டு, ஒட்டு தாடி, மீசையுடன் போட்டியைக் காண வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் நடைபெற்ற மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்ரா விளையாட்டுக் கழகம் சம்பியன்

மீரா நகர் செய்தியாளர்









சம்மாந்துறை யுனிட்டி விளையாட்டுக் கழகத்தின் 17ஆவது வருடத்தை முன்னிட்டு நடைபெற்ற யுனிட்டி சம்பியன் கிண்ணம்-2023 மின்னொளி கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அக்கரைப்பற்று ஹிஜ்றா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

64 அணிகள் பங்கேற்ற தொடரின் இறுதிப் போட்டி சம்மாந்துறை அல்-அர்ஷாத் வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (04) இரவு நடைபெற்றது. இதில் அக்கரைப்பற்று ஹிஜ்றா விளையாட்டுக் கழகமும், சம்மாந்துறை நியூ சன் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. சுற்றுப்போட்டித் தொடரின் சிறந்த வீரராக ஹிஜ்றா அணி வீரர் முஹம்மட் தஸ்னீம் தெரிவானார்.



**மட்டக்களப்பு பழுகாமம் சூட்டிங் ஸ்டார் விளையாட்டுக் கழகமானது பழுகாமம் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடத்திய மின்னொளி கரப்பந்தாட்ட சமரின் இறுதிப்போட்டியில் மட்டக்களப்பு எவர்சைன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி குருக்கள்மடம் ஏசியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.**

**படம்:** குருக்கள்மடம் நிருபர்





**2023ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண வருடாந்த கராத்தே போட்டியில் கராத்தே மாணவன் எம்.எம்.றிகாஸ் சொடகன் கராத்தே குமுதே போட்டியில் தங்கப் பதக்கமும் காட்டா போட்டியில் வெள்ளி பதக்கமும் பெற்று சம்பியனாகத் தெரிவாகி, சான்றிதழுடன் பதக்கங்களைத் தனதாக்கிக் கொண்டார்.** **படம்:** எம்.எஸ்.எம்.ஸாகிர்

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7